# கம்மா சாங்கியாலு



1. முடுபு (நிச்சயதார்த்தம்)
2. உப்பு & ஜவுளி
3. குலதெய்வம் வழிபாடு
4. நலங்கு
5 தோரணச் சாங்கியம்
6 அரிமனைச் சாங்கியம்
7. மாப்பிள்ளை ராஜு மொக்கு
8. மாப்பிள்ளை அழைப்பு
9. சுபமுகூர்த்தம்
10. மணமகள் ராஜு மொக்கு
11. கங்கணம் அவிழ்த்தல்
12. சாங்கியம் பெட்டேதி (சீர் வைத்தல்)
13. ஆறாம் மாதச்சீர்
14. வளைகாப்பு
15. புருண்டு (புன்யோஜனம்)
16. பிட்ட சாங்கியம்
17. மொட்டை கொட்டேதி (முடி இறக்குதல்)
18. உட்தாபின்சேதி (கௌரி நோன்பு)
19. பயிண்ட்டு சாங்கியம் (மாராப்பு சீர்)
20. ருது மங்கள சீர்

முடுபு (நிச்சயதார்த்தம்):

"நிச்சயதார்த்தம்"' என்பதைத்தான் நம் சுந்தர தெலுங்கில் "முடுபு" என்று குறிபிடுவார்கள். இரண்டு மனங்களும் மற்றும் இரண்டு குடும்பங்களின் பந்தங்கள் சேரும் ஒரு தொடக்க விழா என்று கூட சொல்லலாம். மங்கள பொருட்களை ஒன்றாக சேர்த்து மூட்டை கட்டி ஒரு முடிப்பு செய்வதால் இந்த விழாவிற்கு முடுபு என்று சொல்கிறார்கள்.



மாப்பிள்ள வீட்டில் இருந்து முடுபு (மூட்டை) எடுத்துச்சென்று பெண் வீட்டில் கொடுக்க, அதனை பெண் வீட்டார் ஏற்றுக்கொண்டு தம் பெண்ணை மணம் முடித்துக் கொடுக்க ஒப்புக் கொள்வர். கம்ம குலத்தவருக்கே மிகவும் பெருமை சேர்க்கும் இதன் விவரங்களை இனி காண்போம்.

முதலில் மாப்பிள்ளை வீட்டில் குலதெய்வத்தை வைத்து வழிபடவேண்டும். பூஜை அறையில் பெருமாள், தாயார் படத்தை வைத்து, அப்படத்துக்கு முன் ஒரு மனைப்பலகையில் மாக்கோலம் போட்டு வைக்க வேண்டும். பலகையின் வலது பக்கத்தில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைக்க வேண்டும்.

பலகையில் தலைவாழை இலையைப் போட்டு, பச்சரிசி ஒரு பிடி பரப்பி, ஒரு குடத்தில் அல்லது செம்பில் ஜலம் விட்டு அதனுள் துளசி, பூக்கள், மஞ்சள் அரிசி போட்டு அதன் மேல் 5 அல்லது 7 அல்லது 9 இலைகள் உள்ள மாவிலை கொத்தினை வைத்து , பச்சரிசியின் மேல் வைக்க வேண்டும். ஒரு தேங்காயை கழுவி, குடுமி மேல் நோக்கி கண்கள் இரண்டும் முன்னால் இருக்கும்படி வைக்க வேண்டும். தேங்காயின் மேல் அவரவர் சௌகரியம் போல மஞ்சளில் காது, கண், மூக்கு வரைந்து கொள்ளலாம், பின் பட்டுப்பாவாடை உடுத்தி, மஞ்சள் சரடுகள் போட்டு, மல்லிகைப்பூ மாலை சாத்தி, கம்மல் மூக்குத்தி போன்ற நகைகளைப் போட்டு அலங்கரிக்க வேண்டும். இரண்டு குத்துவிளக்கை ஏற்றி வைத்து, பெருமாளுக்கும், குலதெய்வத்துக்கும் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம் வைக்க வேண்டும். ஒரு மஞ்சள் துணியில் சிறிது மஞ்சள் அரிசி, துளசி, மல்லிகைப்பூவுடன் காணிக்கை தனித்தனியாக வைக்க வேண்டும்.

குலதெய்வதுக்கும் அதே போல தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம் வைத்து மஞ்சள் துணியில் 5 ரூபாய் பணம் வைக்க வெண்டும். அங்கேயே பலபத்ர சாமிக்கும் கானிக்கையாக 1 ரூபாய் பணம் வைக்க வெண்டும். குலதெய்வத்துக்கு முன்பாக ஒதிப்பணமாக 11 காசுகளை மஞ்சள் துணியில் அட்சதை, துளசி, பூக்களோடு வைக்க வேண்டும். முதலில் பிள்ளையாருக்குப் பூஜை செய்து விட்டு, பின் பெருமாள், தாயார், குலதெய்வங்களுக்கும் பூஜை செய்ய வேண்டும்.

பின்னர் ஒரு சதுரமான பட்டு அல்லது நூல் துணியில் நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவி சுபவேளையில் இரு சுமங்கலிகள் வார சூலம் பார்த்து அமர்ந்து துண்டை விரித்து அதில் ஒரு தேங்காய் , ஒரு சீப்பு பழம் (ஒற்றைப்படையில்), வெற்றிலை 1/2 கவுளி, பாக்கு 1/2 படி, 5 விரலி மஞ்சள் கொம்பு , 11 சந்தன வில்லை, 5 எலுமிச்சம் பழம் , 200 கிராம் கல்கண்டு, 2 நாமக்கட்டி, 1/2 படி அட்சதை அரிசி , 1 குங்குமச்சிமிழ் , மல்லிகைபூப்பந்து, ஒதிபணம் ஆகியவற்றை வைத்து மூட்டையாக கட்டி , முக்காலியின் மேல் வைத்து பூஜை செய்ய வேண்டும். பின்னர் பெண் வீட்டுக்கு 5 சுமங்கலிகள் முதலில் செல்ல வேண்டும். பின்னர் சிறிது நேரம் கழித்து தாயாதிகளில் பெரியவர்கள் முடுபு மூட்டையை எடுத்து செல்ல வேண்டும். அவர்களுடன் சம்பந்திகள் மற்ற உறவு முறைக்காரர்களும் செல்லலாம்.

பெண் வீட்டிலும் பூஜை அறையில் பெருமாள் தாயார் படங்களுக்கு முன் குலதெய்வத்தை நிறுத்த வேண்டும். பெருமாளுக்கு, குலதெய்வத்துக்கு, பலபத்திரருக்கு, என தனித்தனியாக மஞ்சள் துணிகளில் அட்சதை, துளசி, மல்லிகைபூவுடன் காணிக்கையை காசாக வைக்க வேண்டும். ஒரு முக்காலியை முன்புறமாக வைத்து அதன்மேல் ஒரு தட்டில் சந்தனம், அட்சதை , குங்குமம் ஆகியவை அடங்கிய கிண்ணங்களையும், 5 எலுமிச்சம் பழம், வெற்றிலை பாக்கு, பூ, போங்கு நூல் (மஞ்சள் சரடு) ஆகியவற்றை வைக்க வேண்டும். வேறு ஒரு தட்டில் ஒரு எலுமிச்சை, 5 வெற்றிலை , 5 பாக்கு வைக்க வேண்டும். தேங்காய் பழம் வைத்து மாப்பிள்ளை வீட்டார் வருவதற்கு முன்பே பூஜை செய்ய வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டில் இருந்து முதலில் வரும் 5 சுமங்கலிகளை வரவேற்று உபசரித்து குங்குமம், பூ, மஞ்சள் சரடு கொடுக்க வேண்டும். பின்பு சுமங்கலிகள் வீட்டிற்கு முன்னால் சென்று நிற்க வேண்டும், முடுபு கொண்டுவரும் பெரியவர்கள், வரும் பொது நல்ல சகுனமாக இருக்க வேண்டும் என்பதற்காக சுமங்கலிகள் வீட்டுக்கு முன்னால் நிற்க வேண்டும். அவர்கள் கொண்டுவந்த முடுபு மூட்டையை பூஜைஅறையில் உள்ள முக்காலியின் மீதுள்ள தட்டில் வைக்க வேண்டும். பெண்

வீட்டை சேர்ந்த சுமங்கலிகள் பூஜையறையில் முடுபு மூட்டையை பிரித்து, கற்பூரம் ஏற்றி பூஜை செய்து ஒதிபணத்தை எடுத்து குலதெய்வத்திடம் வைக்க வேண்டும்.பின்னர் மூட்டையில் உள்ள வெற்றிலை, பாக்கு, பூ, எலுமிச்சை, கல்கண்டு, குங்குமச்சிமிழ் ஆகியவற்றை எடுத்து ஒரு தட்டில் வைத்து முக்காலியுடன் கொண்டுவந்து, முன்னால் ஒரு குத்துவிளக்கும் பின்னால் ஒரு குத்துவிளக்கும் சுமங்கலிகள் எடுத்துவர முன் அறையில் அமர்ந்துள்ள பெரியவர்கள் முன் வைக்க வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டார் அந்த முக்காலி மேல் உள்ள தட்டில், நிச்சயதார்த்தம் செய்வதற்காக பணம் வைப்பார்கள். பெண் வீட்டார், அத்தட்டினை எடுத்து சென்று பூஜைஅறையில் வைத்து சிறிது பணம் கூடுதலாக வைத்து எடுத்துக்கொண்டு வந்து பெரியர்வர்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் வைக்க வேண்டும். பெரியவர்கள்

மாப்பிள்ளை வீட்டிலிருந்து கொண்டுவந்த வெற்றிலை பாக்கினை "ராஜுலு பூசாரிகளுக்கு" என்று கூறி 5 பிடிகள் எடுத்து விரிப்பின்மீது வைக்க வேண்டும். எல்லோருக்கும் சந்தனம், குங்குமம், வெற்றிலை பாக்கு, கல்கண்டு கொடுக்க வேண்டும். பெரியோர்கள் எல்லோரும் எழுந்து மீண்டும் அமர்ந்து கொள்ள வேண்டும். பெண் வீட்டார் வைத்த பணத்தை மாப்பிள்ளை வீட்டார் வைத்துக் கொள்ளவேண்டும்.

முடுப்பு செய்யும் நாளன்றே திருமண நாளையும் நிச்சயம் செய்வார்கள். அதற்கு மாப்பிள்ளை வீட்டார் முடுப்பு கொண்டுவரும் போதே மூடிபோட்ட செம்பில் 1 1/4 படி நெய், ஒரு பாத்திரத்தில் 5 அல்லது 7 அல்லது 9 படி நெல் போட்டு அதில் வெற்றிலை பாக்கு, 2 மஞ்சள் கொம்பு , 2 எலுமிச்சை, பூ, குங்கும சிமிழ் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். அல்லது அப்படி செய்ய முடியாதபட்சத்தில் ஒரு தட்டில் வெற்றிலை பாக்குடன் பவுன் அல்லது பணம் வைக்கலாம்.

மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்துள்ள நெல் பாத்திரம், நெய் செம்பு ஆகியவற்றை முன்னால் வைத்து இரு வீட்டாரும் அமர்ந்திருக்க, மாப்பிள்ளை வீட்டார் திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டும் என பெண் வீட்டாரிடம் கேட்க வேண்டும். அப்போது அவர்கள் தட்டில் வைத்து தரும் வெற்றிலை பாக்கு, பவுன் அல்லது பணத்தை பெண் வீட்டார் எடுத்து வைத்து கொள்ள வேண்டும். கல்யாண நாள், நலங்கு, முஹூர்த்த நேரங்கள் எல்லாம் குறித்து இரண்டு தாள்களில் எழுதி மஞ்சள்

தடவி தலா ஒன்று பெற்றுக்கொள்ளவேண்டும். அன்றே உப்பு ஜவுளி வாங்கும் நாளும் நேரமும் முடிவு செய்து கொள்ளவேண்டும்.

உப்பு & ஜவுளி :

உப்பு ஒரு மங்களப் பொருள் ஆகும், எனவே திருமண செலவினங்களில் முதலில் வாங்குவது உப்பு தான். ஒரு நல்ல நாளில் அதிகாலை வேளையில் உப்பு வாங்க வேண்டும் . மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் சேர்ந்தே வாங்கலாம் அல்லது தனித்தனியாகவும் வாங்கலாம். முதலில் மாப்பிள்ளை வீட்டார் வாங்க வேண்டும், பின்னர் தான் பெண் வீட்டார் வாங்க வேண்டும். முதல் நாளே அருகில் உள்ள கடையில், நல்ல நேரத்தை குறிப்பிட்டு அந்த நேரத்தில் அவர்கள் தயாராக இருக்கும்படி சொல்லி ஏற்பாடு செய்ய வேண்டும். 5 சுமங்கலிகள் ஒரு பாத்திரத்தில் வெற்றிலை, பாக்கு, பூ, எலுமிச்சை, குங்குமம் வைத்து, கொண்டு போக வேண்டும். கொண்டுபோகும் பாத்திரத்தில் 5 அல்லது 7 அல்லது 9 படி உப்பு போட்டு அதன் மேல் பூ, எலுமிச்சை, கல்கண்டு, வெற்றிலை பாக்கு, சந்தன வில்லை, குங்குமம், மஞ்சள் கொம்பு, ஆகியவற்றை வைத்து கடைக்காரர் கொடுக்க வேண்டும். சுமங்கலிப் பெண்கள் அதனை பெற்று கொண்டு மொத்தமாக பணம் கொடுத்துவிட்டு வரவேண்டும். வீட்டில் பூஜையறையில் ஜலமூலையில் வைத்து பூஜை செய்து சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமம் கொடுக்க வேண்டும். உப்பு வாங்கிய அன்றோ வேறு ஒரு நல்ல நாளிலோ மணமக்களுக்குரிய புத்தாடையும் , மாங்கல்யத்தையும் வாங்கலாம்.

நகைக்கடைக்குச் சென்று லக்ஷ்மி காசினை வாங்கி, அங்கேயே குழி அடித்துத்தரும்படி வாங்க வேண்டும் அல்லது “குண்டக்காசு” என சொல்லப்படும் குழிக்காசு தான் நம் கம்மவாருகுரிய தாலிக்காசு ஆகும். தாலிக்காசு வாங்கிய பின் பூஜை அறையில் வைத்து கும்பிட வேண்டும்.

குலதெய்வ வழிபாடு :

குலதெய்வ வழிபாட்டில் முதலில் மணமகன் மற்றும் மணமகளுக்கு தாய்மாமன் சாங்கியம் என சொலப்படும் உருமாலை சாங்கியம் மற்றும் மெட்டி அணிவிக்கும் சாங்கியம் செய்ய வேண்டும்.

உருமாலை சாங்கியம்:

உருமாலை சாங்கியம் என சொலப்படும் சீர் மணமகனுக்கு, அவரின் தாய் மாமனால் செய்யப்படும் ஒரு சாங்கியம் ஆகும். ஒரு நல்ல நாளில் தாய் மாமன் வந்து மணமகனை தனது வீட்டிற்கு அழைத்து சென்று எண்ணெய் ஸ்நானம் செய்வித்து பட்டு வேட்டியை பஞ்ச கச்சம் வைத்து கட்ட வேண்டும். வெள்ளை, சிவப்பு நாம வைக்க வேண்டும். உருமாலை கட்டும் வேஷ்டியில் ஒரு முனையில் 2 வெற்றிலை பாக்கு அட்சதைப்பணம் வைத்து முடித்து போட்டு உருமாலை கட்ட வேண்டும். அதில் சிறிய பூச்சரம் தொங்கவிட வேண்டும். புதிய வெண்பட்டு சட்டையும், பஞ்சகச்ச வேஷ்டியும் அணிந்து, தோளில் அங்கவஸ்திரம் துலங்க, உயர்ந்த தலைப்பாகையணிந்து நாமம் தரித்து விளங்குபவரே கம்மகுல மண்மகனாவார். தாய் மாமன் வீட்டில், கிழக்குப்பார்த்து ஜமக்காளம் விரித்து, அதன் மேல் மனைப்பலகை போட்டு மணமகனை உட்கார வைத்து, இருபுறம் குத்துவிளக்குகளை ஏற்றி வைக்க வேண்டும் .

தாய் மாமன், மணமகனின் வலது காலில் முதலில் மெட்டி அணிவித்து, பின் இடது காலில் அணிவிக்க வேண்டும் , பின்னர் அட்சதை தூவி ஆசீர்வதிக்க வேண்டும். மற்ற உறவினர்கள் வெற்றிலை பாக்கு கொடுத்து, சந்தனம், குங்குமம் வைத்து அட்சதை போட்டு ஆசீர்வாதம் செய்ய வேண்டும். பின்னர் பூஜையறையில் போய் நமஸ்காரம் செய்துவிட்டு கிழக்கு பார்த்து அமர்ந்து தலைவாழை இலை போட்டு சாப்பிட செய்ய வேண்டும். அதன் பின்னர் தாய் மாமா , மாமி மற்றும் எல்லோரும் பழங்கள்,பூ,சந்தனம்,குங்குமும்,இனிப்புடன் மணமகனை அழைத்து கொண்டுபோய் அவரது வீட்டில் விட்டுவிட்டு வரவேண்டும் . மணமகனுக்கு வாசலில் ஆர்த்தி சுற்றிய பின் வீட்டுக்குள் அழைத்து சென்று, பூஜையறையில் விளக்கேற்றி சாமி கும்பிட வேண்டும். உருமாலை சாங்கியம் செய்த பின்பு மணமகன் வீட்டை விட்டு வெளி இடங்களுக்குச் செல்லக்கூடாது.

மெட்டி அணிவிக்கும் சாங்கியம் :-

திருமணத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பே மணமகளைத் தாய் மாமன் வீட்டிற்கு அழைத்து வரவேண்டும். காலை நேரத்தில், கிழக்கு பார்த்து மனப்பலகை போட்டு, பெண்ணை அமரச் செய்து, அத்தை , பாட்டி மற்றும் 3 அல்லது 5 சுமங்கலிகள், பெண்ணின் தலையில் எண்ணெய் தேய்க்க வேண்டும். பின் நீராட்டு செய்து, புதிய புடவை, நகைகளை அணியச் செய்ய வேண்டும். மணமகளை அலங்கரித்து நெற்றியில் நாமம் தரிக்கச் செய்ய வேண்டும். நல்ல நேரத்தில் , இரண்டு விளக்குகள் ஏற்றி 7 அல்லது 9 சீர்தட்டுகள் (வெற்றிலை பாக்கு,பழம், இனிப்பு வகைகள் , பூ, தேங்காய்) வைத்து, மணமகளை முன்னால் நிற்க வைக்க வேண்டும். பின்னர் தாய்மாமன் அல்லது தாய்மாமனின் மனைவி , மணமகளின் வலது காலில் முதலிலும் பின்பு இடது களிலும் மெட்டி அணிவிக்க வேண்டும். பின்னர் பெரியவர்கள்,மற்றும் உறவினர்கள் மணமகளுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து, நெற்றியில் திலகமிட்டு, பூச்சூட்டி அட்சதை தூவி ஆசீர்வாதம் செய்ய வேண்டும். பின்பு மணமகளை கிழக்கு நோக்கி அமரும்படி செய்து தலைவாழை இலை போட்டு விருந்துண்ணச் செய்து, சீர்தட்டுகளுடன் தாய் வீட்டிற்கு அழைத்து செல்ல வேண்டும். மணமகளின் வீட்டில் மஞ்சள் நீர் சுற்றி, ஆர்த்தி எடுத்து வீட்டினுள் அழைத்து சென்று பூஜையறையில் சாமி கும்பிடச் செய்ய வேண்டும். பெரியவர்கள் மணமகளை ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

குலதெய்வ வழிபாடு :



உருமாலை சீர் சாங்கியம் முடிந்த உடன் , நல்ல நேரத்தில் குலதெய்வத்திற்கு பொங்கல் வைக்க வேண்டும். மணமகனின் சகோதரி முறை உள்ளவர்கள் அல்லது அவரது குலத்தில் பிறந்த பெண்கள் தான் பொங்கல் வைக்க வேண்டும். பின்பு பூஜை அறையில் குலதெய்வத்தை நிறுத்தி (முடுபு செய்யும் பொது குலதெய்வத்தை வழிபாடும் முறை) வழிபாடு செய்ய வேண்டும். மணமகளின் முஹூர்த்தப் புடவையும், ரவிக்கையும் வைத்து அதன் மேல் வெற்றிலை பாக்கு, பூ, எலுமிச்சை ஆகியன வைக்க வேண்டும். மணமகளுக்கு மணமகன் வீட்டார் அணிவிக்க போகும் நகைகள், மாங்கல்ய காசும் மற்றும் மணமகன் அணியும் ஆடைகளையும் பூஜை அறையில் வைக்க

வேண்டும். அதனுடன் குலதெய்வத்திற்கு வைத்த பொங்கலையும் வைத்து, தேங்காய் உடைத்து, கற்பூரம் ஆர்த்தி காட்டிப் பூஜை செய்ய வேண்டும்.மணமகன் வீட்டார் பூஜை செய்த பின் பெண் வீட்டாரும் அதே போல் குலதெய்வத்திற்கு பூஜை செய்ய வேண்டும். மாப்பிள்ளை சீருக்கு எடுத்த ஆடைகளுடன், அவருக்கு அணிவிக்கும் நகைகளையும் வைத்து பூஜை செய்யவேண்டும். இந்த சாங்கியதிருக்கு தாயதிகளை அழைக்க வேண்டும். நல்ல நாளும் ,நேரம் பார்த்து மண்டபத்தில் உப்பு மஞ்சள் கொண்டுபோய் வைக்க வேண்டும்.

நலங்கு:

நலங்கு என்ற சொல்லின் அடிப்படை நலம் என்பது ஆகும். நன்மை பெருகவும், இன்பம் பொங்கவும், பெரியவர்களும், உறவினர்களும் மணமக்களை மங்கலப் பொருட்களை கொண்டு வாழ்த்தும் சடங்கே நலங்குச் சடங்காகும்.

நமது கம்மவார்களின் சிறப்பு என கருதப்படுவது இந்த நலங்கு. ஒரு திருமணத்தின் ஆரம்ப அறிகுறியாகக் கருதப்படுவது இந்த நலங்கு. ஆரம்ப காலங்களில் நலங்கின் போது மணமக்களை வாழ்த்தியும் கேலி செய்தும் பாடும் பாடல்கள் பல இடம் பெற்று இருந்தன. காலப்போக்கில் அவை குறைந்து விட்டது.

அது போலவே முன்பெல்லாம் மணமகனுக்கும் மணமகளுக்கும் அவரவர் வீட்டிலேயே தனித்தனியாக நலங்கு வைக்கும் பழக்கம் இருந்தது, முன்பு, முதலில் மணமகனுக்கு நலங்கு வைத்து பின்பு "ராசமொக்கு" பெற்று பெண்ணுக்குரிய நலங்கு மாவும், புடவையும் மணமகன் வீட்டார்கள் பெண்ணிடம் கொண்டு வந்து சேர்த்த பின்பு , பெண்ணிற்கு நலங்கு வைப்பார்கள்.

ஆனால் தற்போது கல்யாண மண்டபத்திலேயே இருவருக்கும் சேர்த்து நலங்கு வைக்கும் பழக்கம் நடை முறைக்கு வந்தது.

பொதுவாக நலங்கு மாவு என்பது, பச்சரிசியும் பாசிப்பயறு அல்லது பச்சைபயறு சம அளவில் எடுத்து அத்துடன் கஸ்தூரி மஞ்சள், மஞ்சள் தூள் அல்லது மஞ்சள் கொம்புடன் துளசி இலைகளையும் சேர்த்து நலங்கு மாவு தயாரிக்க வேண்டும்.

மணமேடையை சுத்தப்படுத்தி கோலமிட்டு, தூய வெள்ளை வேஷ்டியை விரித்து, அதன் மேல் மனைப் பலகையை வைத்து அதன் மீது சுத்தமான வெள்ளை உடுப்பை

விரிக்க வேண்டும். பின்பு மணவறையில் இரண்டு குத்து விளக்கினை ஏற்றி அதில் மல்லிகைப் பூவினை சுற்றி வைக்கவும். விளக்கு அணையாமல் பார்த்துக் கொள்வது அவசியம், அருகில் தேவையான அளவு எண்ணை வைத்திருப்பது மிகவும் முக்கியம்.

மணமகனின் அறையில் இரண்டு குத்து விளக்குகளுக்கு மஞ்சள் மற்றும் குங்குமம் வைத்து மல்லிகைப் பூவால் சுற்றி வைத்து விளக்கினை ஏற்ற வேண்டும். பின்பு ஒரு முக்காலியின் மேல் ஒரு தட்டில் சந்தானம், நலங்கு மாவு, அட்சதை, குங்குமச்சிமிழ், பன்னீர் சொம்பு, வெற்றிலை பாக்கு, எலுமிச்சை, பூ முதலியன வைக்கவும்.

பின்பு ஒரு சுமங்கலி பெண்ணானவள் முதலில் வர, அவள் பின்னர் வேறு ஒரு சுமங்கலி அந்தத்தட்டை முக்காலியுடன் சேர்த்து எடுத்து வர, அவர் பின்னே மாப்பிளையையும் துணை மாப்பிளையயும் அழைத்து வருதல் வேண்டும். அதன் பின்பு மற்றொரு விளக்கினைக் கொண்டு வருதல் வேண்டும்.
மணமகன் மணமேடையை மூன்று முறை சுற்றி வந்து அதன் பின்பு மணவறையில் வலது புறம் அமர வேண்டும். அவ்வாறே மணமகளும் விளக்கு முக்காலி தட்டுடன் சுற்றி மாப்பிள்ளைக்கு பின்புறமாக வந்து இடது புறத்தில் அமர வேண்டியது. அடுத்து புரோகிதர் மந்திரங்கள் சொல்லியதும் முகூர்த்தக்கால் கட்ட வேண்டும்.



இதற்கு, மூன்று கிளைகள் கொண்ட (கவுட்டி போல்) ஒரு பாச்சான் கொம்பில், அரச இலைகளுடன் வைத்து, எள் தவிர்த்த நவதானியத்தை மஞ்சள் துணியில் முடிந்து, கொம்பில் கட்டித் தயராக வைக்கவும். புரோகிதர் அதற்குப் பூஜை செய்த பின் மூன்று சுமங்கலிகள், (மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் சேர்ந்து) அதை மண்டபத்தில் ஜலமூலையில் உள்ள ஒரு தூணில் கட்ட வேண்டும். பின் அவர்களுக்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம், மஞ்சள் சரடு கொடுக்கவும். அதன் பின் நலங்கு ஆரம்பமாகும். முதலில் புரோகிதர் மணமக்களுக்கு, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம், வைத்துக் கையில் கொடுத்து நலங்கு வைக்க வேண்டும்.

நலங்கிடும் முறை

நலங்கு மாவு தொட்டு, நெற்றியில் சந்தனம், குங்குமம் வைத்து அட்சதை அரிசி எடுத்து வளர்ச்சியைக் காட்டும் விதமாகலக் கீழிருந்து மேல் நோக்கிக் கால், தோள், தலையில் விழும்படி, இரு கைகளாலும் நலங்கு வைத்து மணமக்களை வாழ்த்தி இறைவனை வணங்க வேண்டும்.

மணமக்களுக்குத் தாய் மாமன் முறையில் உள்ளவர்கள் முதலில் நலங்கு வைக்க வேண்டும். பின்னர் மற்ற பெரியவர்களும், சுமங்கலிகளும் நலங்கு வைக்க வேண்டும். கடைசியாக மாப்பிள்ளையின் அத்தை அல்லது அண்ணி முறை உள்ளவர்கள் மாப்பிளையின் கைகளுக்கு நலங்கு மாவு பூசிச் சந்தனம், குங்குமம் இட்டு நலங்கு வைத்தபின், அவர்கள் கையில் உள்ள வெற்றிலை பாக்கினை வாங்கி தட்டில் வைக்க வேண்டும். அவ்வாறே பெண்ணின் அத்தை அல்லது அண்ணி பெண்ணுக்கும் செய்ய வேண்டும். அழைத்துக்கொண்டு வந்தது போலவே பெண்ணையும், மாப்பிள்ளையையும் விளக்குகள், முக்காலித் தட்டுடன் அவரவர் அறைகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

இந்த நலங்குச் சீர் நடை பெறும்போது மாப்பிள்ளை வீட்டைச் சார்ந்த இரண்டு சுமங்கலிகள் தாலிச்சரடுகள் மஞ்சள் நூல் போட்டுத் தாலிக்காசினைக் கோர்த்து வைக்க வேண்டும். நலங்கு நிறைவு பெற்றவுடன், மாப்பிள்ளை வீட்டார் ஒரு தட்டில் முகூர்த்தப்புடவை, மாலை, செண்டு, பாசிகம், வெற்றிலை பாக்கு, பூ மற்றும் எலுமிச்சம் பழம், வைத்துப் பெண் வீட்டாரிடம் கொடுக்க வேண்டும். நலங்கு நிகழ்ச்சியின் முடிவில் உறவினர்கள் நலங்குப் பாடல்கள் பாடிச் சிறப்பிப்பது வழக்கம்.

தோரணச் சாங்கியம் :

"நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற் கீழ்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான் "
என்று ஆண்டாள் தன் பாட்டில் குறிபிடுகிறார்.

நம் கம்மகுலத்தில் குறிப்பிடும் தோரணம் என்பது வலைப்பின்னல் போன்ற அமைப்பில் நூல் சுற்றப்பட்டு பச்சை அல்லது சிவப்பு பட்டுத்துணியில்

வேலைப்பாடுகள் உடையதாக விளங்கும் மரச்சட்டமே. இது தெலுங்கு வண்ணாரிடம்தான் இருக்கும். நலுங்கு முடிந்துடன் தோரணம் கட்ட வேண்டும். முன்பே வண்ணாரிடம் சொல்லித் தயார் செய்து வைக்கும் படி செய்ய வேண்டும். ஒரு தட்டில் தலைவாழை இழை விரித்துப் பச்சரிசி இரண்டு படி போட்டு, அதில் ஒரு தட்டு குச்சியை குத்தி வைக்க வேண்டும்.

மற்றொரு தட்டில், தலைவாழை இழை போட்டு, அதில் அரிசிச்சோறு போட்டு அதிலும் தட்டுக் குச்சியை குத்தி வைக்க வேண்டும். மற்றொரு தட்டில் 1 தேங்காய், 2 பழம், வெற்றிலை பாக்கு , சந்தனம், குங்குமம், மஞ்சள் நீர், ஊதுபத்தி, கற்பூரம், அட்சதை ஆகிவற்றை எடுத்து வைத்து கொள்ளவேண்டும் . வாசலில் போடப்பட்டிருக்கும் பந்தலுக்கு வெளியே, வண்ணாரிடம் மாத்து விரிக்கச் சொல்லி எல்லா தட்டுகளையும் அதன்மேல் வைக்க வேண்டும். வாத்தியக்காரர்கள் வாத்தியம் வாசிக்க பந்தமும் பிடிக்க வேண்டும். வண்ணார் கையில் வைத்திருக்கும் தோரணத்துக்கு, சந்தனம் , குங்குமம், அட்சதை வைத்து பின்னர் வண்ணாருக்கும் பொட்டிட்டு தேங்காய் உடைத்து தோரணத்திற்குப் பூஜை செய்ய வேண்டும். பின்னர் மஞ்சள் நீர் சுற்றித் தோரணத்தைப் பந்தலில் கட்டச் செய்ய வேண்டும். தட்டில் உள்ள அரிசி, சாப்பாடு, தேங்காய், பழங்களுடன் காணிக்கையும் வைத்து வண்ணாருக்குக் கொடுக்க வேண்டும்.

அரிமனைச் சாங்கியம் :

நிறைவான வாழ்வினைக் குறிக்கும் அடையாளமாகக் கருத்தபடுகிறது இந்த அரிமனைச் சாங்கியம். இதனை ஒட்டிய முளைப்பாரி வைக்கும் முறையை, வளமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

திருமணத்திற்கு 10 நாட்களுக்கு முன்பே, 2 சிறிய மண்தொட்டியில், செம்மண், மணல் எருப்பொடி மூன்றையும் கலந்து இரண்டு மண்தொட்டியின் உள்ளே போடவேண்டும், அதில் நெல், பாசிப்பயறு, கம்பு,கோதுமை ஆகியவற்றைத் தண்ணீர் விட்டு நன்றாகக் கலந்து தூவி விட வேண்டும். தினமும் தண்ணீர் தெளித்து வரவும். மூன்றாவது நாளில் இருந்து, தினமும் சிறிது நேரம் வெயிலில் எடுத்து வைக்க வேண்டும். ஒரு வாரத்தில் இது நன்றாக வளர்ந்துவிடும்.

பந்தலில் தோரணச் சீர் முடிந்தவுடன், மணமகனின் அறையில் ஜலமூலையில், சுத்தம் செய்து, நெல் பரப்பிக் கோலம் போட்டு இரண்டு சுவர்களுக்கு இடையே

குறுக்காகத் தோரணம் கட்ட வேண்டும். மண்டப வாசலில் உள்ள பந்தலுக்கு வெளியில் வலைபக்கத்தில் வண்ணார் மாத்து விரிக்கச் செய்து, 2 பெரிய பானை மற்றும் 2 சிறிய பானை வைக்க வேண்டும். இரண்டு தட்டுகளில் தலைவாழை இழை போட்டு, ஒரு தட்டில் பச்சரிசி 2 படியும் மற்றொரு தட்டில் சாப்பாடு வைத்து அவற்றில் தட்டுக் குச்சிகளை குத்தி வைக்க வேண்டும். பின்னர் அந்த பானைகளுக்கு பொட்டு வைத்து நெல் போட்டு மூடியால் மூடிவிடவேண்டும், தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு கற்பூரம் வைத்து பூஜை செய்ய வேண்டும்.

பெரியவர்கள் பானை எடுத்துக்கொண்டு பந்தலில் உள்ள தோரணத்தின் கீழ் நிற்கவேண்டும் , அவர்களின் கால்களைக் கழுவி, ஆர்த்தி சுற்றி , அவர்களுக்கும் பானைகளுகும் பொட்டு வைத்த பின் உள்ளே எடுத்துக் கொண்டு போக வேண்டும். அவர்கள் போகும் போது அவர்கள் மேல் நெல்லைப் போட்டுக்கொண்டே வரவேண்டும்.

மணமகனின் அறையில், ஜலமூலையில் தலைவாழை இழை போட்டுப் பெரிய பானைகளை வைக்க வேண்டும், அதன் மேல் சிறிய பானைகளை வைக்க வேண்டும். பானைகளை சுற்றி முளைப்பாரி தொட்டிகளை வைக்க வேண்டும். வெள்ளை, கருப்பு கம்பிளி நூலுடன் மஞ்சள் நூல் ஒன்றும் சேர்த்து திரித்து, அதில் ஒரு மஞ்சள் கொம்பு கட்டிவைக்க வேண்டும். இதுபோல் மூன்று தயாரித்து, இரண்டை பெரிய பானைகளின் கழுத்தில் கட்ட வேண்டும், மற்றொரு நூலை சிறிய மண் கலயத்தில் கட்டி பானைகளின் முன்புறம் வைக்க வேண்டும். எலுமிச்சம்பழம் அளவுக்கு மஞ்சள் உருண்டைகள் இரண்டு செய்து, பெரிய பானைகளின் கழுத்துக்குக் கீழே வைத்து 9 நூலால் ஆன மஞ்சள் கயிற்றால் அவற்றை இணைத்து விடவேண்டும்.

பானைகளுக்கு முன்புறம், 5 விளக்குத் தண்டுகளில் விளக்குகளை வைத்து, அவற்றுக்கு மஞ்சள், குங்குமும் வைத்து ஏற்றி வைக்க வேண்டும்.பின்னர் மூன்று சுமங்கலிகள் தண்ணீர் கொண்டுவந்து மண்கலயத்தில் ஊற்றி பூஜை செய்ய வேண்டும் . இவ்வாறு செய்யும் சுமங்கலிகளுக்கு மனைபலகைகள் பொட்டு உட்கார வைத்து மஞ்சள் குங்குமும், பூவும் கொடுத்து தலைவாழை இலை போட்டு விருந்தளித்து உபசரிக்க வேண்டும்.

மாப்பிள்ளை ராஜு மொக்கு:

நம் வாழ்வில் முக்கியமான செயல்களுக்கு செல்லும் முன் பெரியவர்களிடம் ஆசி பெறுவது நம் குல வழக்கம் ஆகும், அதுபோல் மாப்பிள்ளை கோலம் கொண்ட மணமகன், திருமணம் செய்வதிற்கு முன்பு ,பிள்ளையார் கோவிலுக்கு செல்வது நம் மரபு. கோவிலுக்கு செல்லும் முன் மணமகன் பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கும் முறை தான் ராஜு மொக்கு சாங்கியம்.

கோவிலுக்கு செல்லும் முன், மாப்பிள்ளை, துணை மாபிள்ளையுடன் வந்து மண்டப வாயிலில் உள்ள பந்தலில், தோரணத்தின் கீழ் நிற்க வேண்டும். தாயதிகளில் ஆண்கள் ஒரு புறமும், பெண்கள் ஒரு புறமும் நிற்க, அவர்கள் கையில் 2 வெற்றிலை, 2 பாக்கு கொடுக்க வேண்டும். முன்வாயிற்படி அருகே, ஒரு திரிபோட்டுக் குத்துவிளக்கு ஏற்றி வைத்திருக்க வேண்டும். விளக்கிற்கு முன்னாள் ஒரு தாம்பாளத்தட்டு வைக்க வேண்டும். மாப்பிள்ளை, விளக்கைப் பார்த்து கும்பிட்ட உடன் திரும்பிப்பார்க்காமல் பிள்ளையார் கோவிலுக்கு சென்றுவிட வேண்டும். போகும் பொது விளக்குத் திரியில் இருந்து, கறுப்புப் பொட்டு எடுத்து, மாப்பிள்ளையின் இடது கன்னத்தில் சிறியதாக ஒரு பொட்டு வைக்க வேண்டும். மற்றவர்களும் விளக்கைப் பார்த்து கும்பிட்டு, வெற்றில்லை பாக்கைத் தாம்பாளத் தட்டில் வைத்து விட வேண்டும். (இது வண்ணாருக்கு சேர வேண்டும்).வாழ்த்தி வழியனுப்புதலும், நல்ல சகுனமும் குறித்து இச்ச்சடங்கு செய்யபடுகிறது.

மாப்பிள்ளை அழைப்பு :



தன் வீட்டுக்கு வரப்போகும் மருமகனை வரவேற்கும் முதல் சடங்கு தான் மாப்பிள்ளை அழைப்பு சாங்கியம். பெண் வீட்டார், வாத்தியங்களுடன், சீர் தட்டுகளுடன் ,பிள்ளையார் கோவிலுக்குச் செல்ல வேண்டும். அங்கு மாத்து விரித்து, அதன் மேல் சீர் தட்டுகளை வைக்க வேண்டும் .சீர் தட்டுகளில் ஒன்றில், மஞ்சள்,குங்குமம், போங்கு நூல் , வெற்றிலை பாக்கு, எலுமிச்சை, பூ, ஆகியவற்றை எடுத்து வர வேண்டும். பிள்ளையாருக்கு பூஜை செய்த பின் மாப்பிள்ளை வீட்டுச் சுமங்கலிகள் 5 பேருக்கு மஞ்சள் குங்குமும், பூ, போங்கு நூல், வெற்றிலை பாக்கு,எலுமிச்சை பழம் கொடுக்க வேண்டும் .எல்லோருக்கும் கல்கண்டு அல்லது மிட்டாய் கொடுக்க வேண்டும்.

ஒரு தேங்காய் எடுத்து, மாப்பிள்ளை தலையைச் சுற்றி சிதறுகாய் போட்டு , துணை மாப்பிள்ளை குடை பிடிக்க , மாப்பிள்ளையை முஹூர்த்ததிற்கு அழைத்து செல்ல வேண்டும். மாப்பிள்ளை, திருமண மண்டபத்தில் தோரணப் பந்தலுக்குக் கீழ் நிற்க வேண்டும், அப்போதும் துணை மாப்பிள்ளை குடை பிடித்திருக்க வேண்டும். பின்னர் மணமகளின் தந்தை, மாப்பிள்ளைக்கு மாலை போட்டு மரியாதை செய்ய வேண்டும், பிறகு மைத்துனர் மோதிரம் அல்லது வேறு நகை போட வேண்டும். மணப்பெண்ணின் தங்கை முறை உள்ள பெண், மாப்பிள்ளையின் பாதங்களை கழுவிவிட வேண்டும். அதன் பின் மணமகளின் தாயார், மாப்பிள்ளைக்கு பாலும், பழமும் கொடுக்க வேண்டும், பிறகு ஆர்த்தி சுற்றி, பொட்டு வைத்தபின் மாப்பிள்ளை , மணமேடைக்குப் போக வேண்டும்.

சுபமுஹூர்த்தம் :

நம் கம்மகுல வழக்கப்படி, கங்கணம் கட்டுதல், தாரை வார்த்தல், மாங்கல்ய தாரணம், தலபார் அரிசி மற்றும் மாலை மாற்றல் ஆகிய சடங்குகள் மணமேடையில் செய்வார்கள் .

கங்கணம் கட்டுதல் :

மணமேடையில் மனவறைக்குள் மேல்புறம் புதுத்துணி கட்ட வேண்டும். வண்ணார் மாத்து விரித்து, அதன் மேல் இருவீட்டாரும் கொண்டுவந்த நெல்லைப்பரப்பி, மணைப்பலகைகள் போட்டு, மணவறை ஜமக்காளம் விரித்துத் தயாராக வைக்க வேண்டும்.

மேளதாளங்கள் முழங்க, வேத மந்திரங்களை புரோகிதர் சொல்ல, துணை மாப்பிள்ளையுடன், மணமகன் மணமேடையை மூன்று முறை வலம் வந்து வலது காலை முன்வைத்து ஏறி நிற்க வேண்டும். மணமகனை மறைத்து நடுவில் திரை பிடிக்க வேண்டும். முன்னும் பின்னும் இருவர் விளக்குளை எடுத்துவர, துணைப் பெண்ணுடன், மணமகள் மணமேடைக்கு வந்து, வலதுபுறம் உள்ள மனைப்பலகை மேல் ஏறி நிற்க வேண்டும்.



மணமகளின் மாமா, பெண்ணின் காலை எடுத்து மாப்பிள்ளையின் கால் மேல் மூன்று முறை வைக்க வேண்டும். பின்னர் மாப்பிள்ளை காலை எடுத்து, பெண்ணின் கால் மேல் மூன்று முறை வைக்க வேண்டும். அதன் பின் திரைச்சீலையை நீக்கிவிட வேண்டும். பின் பெண்ணும் மாபிள்ளையும் பலகையின் மேல் அமர்ந்த உடன் ஐயர் புண்யாவாசனம் செய்ய வேண்டும்.

ஐயர் பூஜைகள் செய்து மாபிள்ளையின் கையில் வெற்றிலை, பாக்கு, தேங்காய் கொடுத்து புறங்கையில் சந்தனம், குங்குமம் வைத்து வலது கையில் கங்கணம் கட்டுவார். அதன் பின்னர், மாப்பிள்ளை தன் கையில் இருக்கும் தேங்காய், வெற்றிலை, பாக்கு, ஆகியவற்றை பெண்ணின் கையில் கொடுத்து பெண்ணின் வலது கையில் மாப்பிள்ளை கங்கணம் கட்ட வேண்டும். பின்னர் ஹோம பூஜை செய்ய வேண்டும். அதன் பின்னர் மணமக்கள் தம் பெற்றோருக்குப் பாத பூஜை செய்ய வேண்டும்.

தாரை வார்த்தல் :

தாம் பெற்ற குலமகளை, தமது உரிமைப் பொருளை பிறருக்கு உரிமையாகத் தரும் சடங்கு தான் தாரை வார்த்தல். ஒரு தட்டில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, ஒரு பவுன் அல்லது ஒரு ரூபாய் நாணயம் வைத்து, பெண்ணின் தகப்பனார் கொடுக்க, பெண்ணின் தாயார் செம்பில் தண்ணீர் வார்க்க வேண்டும். அப்போது பெண்ணின் தந்தையார் தனது குலம், கோத்திரம், முன்னோர் பெயர் சொல்லித் தன் பெயர் உரைத்து, மணமகனது குலம், கோத்திரம்,முன்னோர் பெயருடன் மாபிள்ளையின் பெயர் சொல்லி, அவருக்கு தாரை வார்த்துத் தருவதாக கூறவேண்டும். மணமகனின் தந்தையும் தனது குலம்,கோத்திரம் ,முன்னோர் பெயர் சொல்லி தாய் தந்தை இருவரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாங்கல்ய தாரணம் :

திருமண பந்தத்தின் அடையாளமாக திகழும் தாலியணிவிக்கும் சடங்கே மாங்கல்ய தாரணம் ஆகும்.

மஞ்சள் நூல் சேர்த்துக் கோர்க்கப்பட்டிருக்கும் மாங்கல்யத்தை, ஒரு தேங்காய்க்குச் சுற்றி, ஒரு தட்டில் வைத்து, ஐயர், கற்பூரம் காட்டிப் பூஜை செய்தபின், சபையில் உள்ள பெரியோர்களுக்குக் காண்பிக்க வேண்டும். சகலவாதியம் முழங்க மாங்கல்ய தாரணம் செய்ய வேண்டும். மாப்பிள்ளை, பெண்ணின் கழுத்தில் மாங்கல்யம் கட்டி, மூன்று முடிச்சுகள் போட்டு, முடிச்சின் மீது மஞ்சள்,குங்குமம் வைக்க வேண்டும்,

பின்னர் மாப்பிள்ளை பெண்ணின் தலையை சுற்றி கையை வலது பக்கமாகக் கொண்டுவந்து நெற்றியில் போட்டு வைக்க வேண்டும்.

தலபார் அரிசி :-



ஒரு தாம்பாளத்தில் ஐந்து படி அரிசியைப் போட்டு, பெண்ணின் இருகைகளையும் தாய்மாமன் பிடித்து அரிசியை அள்ளி மாபிள்ளையின் தலைமேல் மூன்று முறை போட வேண்டும். மாப்பிள்ளையும், மூன்று முறை பெண்ணின் தலை மேல் அரிசி போடவேண்டும்.

மாலை மாற்றல் :-

மாபிள்ளையின் கையில் மாலையைக் கொடுத்து பெண்ணிற்கு போடச் சொல்ல வேண்டும், பிறகு பெண்ணின் கையில் மாலையைக் கொடுத்து மாப்பிள்ளையின் கழுத்தில் போடச் செய்ய வேண்டும். இதுபோல் மூன்று முறை செய்ய வேண்டும். பின்னர் மாப்பிள்ளையின் வலதுபுறம் பெண்ணை நிற்கச் சொல்லவேண்டும். மாபிள்ளையின் அங்கவஸ்திர நுனியும், பெண்ணின் புடவைத் தலைப்பின் நுனியும்



சேர்ந்து முடிச்சுப்போட வேண்டும். மாப்பிள்ளை, பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு முன்னால் செல்ல இருவருமாக மணமேடையை மூன்று முறை வலம் வரவேண்டும். ஒவ்வொரு முறையும் மணமேடையின் அருகில் வைக்கபட்டிருக்கும் அம்மியின் மீது, மாப்பிள்ளை பெண்ணின் வலது காலை எடுத்து மூன்று முறை வைக்க வேண்டும். இச்சடங்கு பெண் கல்போல் அசையாமல் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாகும்.

பின்னர் பந்தலுக்கு வெளியே சென்று, சூரியனைப் பார்த்துக் கும்பிட வேண்டும், மேலும் அருந்ததியை நினைத்து வானத்தைப் பார்க்க வேண்டும். அதன்பின், மணமேடையில், இரண்டு நாற்காலிகளில் அமர்ந்து மாப்பிள்ளையும் பெண்ணும் பூச்செண்டு ஆடவேண்டும். மணமேடையில் செய்யப்படும் சடங்குகள் இத்துடன் நிறைவு பெறுகின்றன.

மணமகள் ராஜு மொக்கு :-

நம் குலமகள், ஒளிவிளக்காக புகுந்த வீட்டிக்கு செல்லும் முன் தன் குலத்தை சார்ந்த பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கும் சடங்கு தான் மணமகள் ராஜு மொக்கு என அழைக்கபடுகிறது.

புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்க்கப் புறப்படும் முன் , மணமகளை தோரணத்துக்கு கீழ் நிற்க வைத்து, பெண் வீட்டாரின் தாயாதிகள் ஆண்களும் பெண்களும் இருபுறம் நிற்க வேண்டும். அவர்கள் கைகளில் 2 வெற்றிலை, 2 பாக்கு கொடுக்க வேண்டும். தலைவாசல் அருகே ஒரு திரி போட்ட விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். விளக்கிற்கு முன்னால் ஒரு தாம்பாளத்தட்டு வைக்கப்பட வேண்டும். பெண் விளக்கைப் பார்த்து கும்பிட்டுவிட்டு வலதுபுறம் திரும்பி, பின்னர் திரும்பிப் பார்க்காமல் மாப்பிள்ளை வீட்டிருக்கு புறப்பட வேண்டும். தாயாதிகள், வெற்றிலை பாக்கைத் தாம்பாளத்தட்டில் வைத்துவிட வேண்டும், அது வண்ணாருக்குச் சேர வேண்டியதாகும்.

கங்கணம் அவிழ்த்தல் :

மாப்பிள்ளையும் பெண்ணும், இரு வீடுகளுக்கும் கிரஹப்பிரவேஷத்திற்கு சென்றுவர வேண்டும். பிறகு தோரணப் பந்தலுக்கு கீழ் நிற்க வைத்து மணமக்களுக்கு தங்கை முறை உள்ள பெண், இருவருக்கும் பாதம் கழுவி விட வேண்டும். பின்னர் ஆர்த்தி சுற்றி உள்ளே அழைத்து வர வேண்டும். அரிமனை வைத்திருந்தால், அந்த அறைக்குச் சென்று கற்பூரம் ஏற்றி கும்பிட வேண்டும். பின்னர் தோரணப் பந்தலுக்கு கீழ் நிற்க வைத்து கங்கணம் அவிழ்க்க வேண்டும்.

ஒரு தாம்பாளத்தட்டில் அரிசி இரண்டு படி, தேங்காய் 1, பழம் 2, வெற்றிலை, பாக்கு, எலுமிசசை, சந்தனம்,குங்குமும்,பால் 1/4 டம்ளர் எடுத்து கொள்ள வேண்டும். மாப்பிள்ளையின் கைகளில் தேங்காய், பழம் எல்லாம் கொடுத்து, துணை மாப்பிள்ளையை, மாப்பிள்ளையின் கங்கண முடிச்சின் மீது கொஞ்சம் பால் வைத்துச் சந்தனம், குங்குமும் வைத்து பின்னர் கங்கணத்தை அவிழ்க்கும்படி செய்ய வேண்டும். அவிழ்த்த கங்கணத்தை அரிசித் தட்டில் வைக்க வேண்டும். மாப்பிள்ளை, தன் கையில் உள்ள தேங்காய், பழம் முதலியற்றை பெண்ணின் கையில் கொடுத்து கங்கணத்தை அவிழ்த்து அரிசி தட்டில் வைக்கவும். பின்னர் மாலைகள், பாசிகம் ஆகியற்றையும் கழற்றி தட்டில் வைக்கவும். பிறகு ஆர்த்தி சுற்றி உள்ளே அழைத்துப் போக வேண்டும். கங்கணம், மாலைகள், அரிசி எல்லாவற்றையும்

மாப்பிள்ளை வீட்டார் கொண்டு செல்ல வேண்டும். மாப்பிள்ளையும் பெண்ணும் உள்ளே வருவதற்குள் அரிமனை எடுத்துவிட வேண்டும்.

சாங்கியம் பெட்டேதி (சீர் வைத்தல்):

கல்யாணத்தன்று மாலை, பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டிற்க்குச் சீர் கொண்டு போக வேண்டும். இதற்க்கு ஒரு மூட்டை தயார் செய்யவேண்டும், அதற்க்குக் கட்டாரி என்று தெலுங்கில் சொல்வார்கள். ஒரு சதுரத் துண்டில் அல்லது பட்டு துணியில், தேங்காய், பழம் ஒரு சீப்பு (ஒற்றை படையில்), வெற்றிலை, பாக்கு, நாமக்கட்டி, கல்கண்டு, பூ, எலுமிச்சம் பழம், கண்ணாடி, சீப்பு, குங்குமச்சிமிழ், மஞ்சள் சரடு (போங்குநூல்) மூன்று பிடி (ஒவ்வொரு பிடியிலும் பதினொரு சரடு), சந்தன வில்லை 9, சீர் பணம் அல்லது பவுன் காசு, மாப்பிள்ளையின் சகோதரிக்கு கொடுக்கும் புடவை ஆகியவற்றை வைத்து கட்ட வேண்டும்.

இந்த மூட்டையை எடுத்துத் செல்ல, ஒரு குச்சியும் வேண்டும். ஒரு செம்பில் மஞ்சள் போட்டு வைக்க வேண்டும். சீர் கொண்டு செல்லும் பொது அவரவர் விருப்பம் போல வெள்ளி, பித்தளைப் பாத்திரங்கள் வைத்து அனுப்பலாம். இரண்டு வகை இனிப்பு, இரண்டு வகை காரம்,பழம் வெற்றிலை பாக்கு, எல்லாம் எடுத்து செல்ல வேண்டும்.

மணப்பெண் புதுப்புடவை கட்டிக்கொண்டு புறப்படும் முன் ஐந்து சுமங்கலிகள் பெண்ணுக்கு, மஞ்சள், குங்குமும் இட்டு,பூ வைத்து போங்கு நூல் கட்டி, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம் ஆகியவற்றை மடியில் வைக்க வேண்டும். பின் அவர்களும் மஞ்சள் குங்குமம் ,போங்கு நூல் அணிந்து கொள்ள வேண்டும். பெண்ணின் சகோதரர் கட்டாரியை (சீர் மூட்டை) எடுத்துகொள்ள மாப்பிள்ளை வீட்டிற்கு புறப்பட வேண்டும். புறப்படும் முன், பெரியவர்கள், மணமக்களை ஆசீர்வாதம் செய்து பணம் வைத்து அனுப்பவேண்டும்.

மாப்பிள்ளை வீட்டில், பூஜை அறையில், கட்டாரியை வைத்து விட்டு குச்சியை எடுத்து விடவேண்டும். மாப்பிள்ளையின் தாயார், கட்டாரியை பிரித்து, அதில் உள்ள மஞ்சள், குங்குமம், பூ, எல்லாம் எடுத்து ஒரு தட்டில் வைக்க வேண்டும், பின்னர் மாப்பிளையின் சகோதரிக்கு புடவையை கொடுத்துக் கட்டிகொண்டபின், மாப்பிள்ளை வீட்டில் உள்ள சுமங்கலி பெண்கள் ஐந்து பேர் , பெண்ணிற்கு மஞ்சள் பூசி, அவர்களும் பூசிக்கொண்டு, போங்கு நூல் கட்டிவிட்டு, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம்

பழம் கொடுத்து, அவர்களும் எடுத்து கொள்ள வேண்டும். மாப்பிள்ளையின் சகோதரி, பெண்ணிற்கு நகை அணிவிக்க வேண்டும்.பொதுவாகப் பவளம் வைத்து செய்த நகையை அணிவித்து , கம்மகுல மருமகளை வரவேற்பது தான் நம் குல வழக்கம். பின்னர் மாபிள்ளையின் சகோதரிக்கு, பெண் வீட்டார், தட்டு கிண்ணம், குங்குமச்சிமிழ் வைத்து கொடுக்க வேண்டும்.

அதன் பின் பெண் , சமையல் அறைக்குச் சென்று, நல்ல நேரத்தில் உப்பு , மஞ்சள், பாத்திரத்தில் கை வைத்து விட்டு, பால் காய்ச்ச வேண்டும். பின்னர் சீர் மூட்டையில் கொண்டுவந்த தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு ஆகியவற்றுடன் ஊதுபத்தி, கற்பூரம், பூ எடுத்துக் கொண்டு, பெண்ணை பிள்ளையார் கோவிலுக்கு அழைத்து சென்று, பூஜை செய்ய வேண்டும். அதன் பின் எல்லோருக்கும் விருந்து கொடுத்து, நல்ல நேரம் பார்த்து மணமக்களை ஆசிர்வாதம் செய்து பெண் வீட்டிக்கு அனுப்ப வேண்டும். அன்று, மணமக்கள் கோவிலுக்குச் சென்று வந்த பின், நல்ல நேரத்தில் சாந்தி முஹூர்த்தம் வைத்து கொள்ள வெண்டும்.

ஆறாம் மாதச் சீர் :-

திருமணம் ஆகி ஆறு மாதம் கழித்து, பெண்ணின் பெற்றோர் மறுவிருந்தளிக்க பெண்ணையும் , மாப்பிள்ளையும் அழைத்துச் சீர் வைத்து, மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். இதுவே ஆறாம் மாதச் சீர், ஆனால் இந்த கால மாறுதலுக்கு ஏற்ப மூன்றாம் மாதத்திலேயே இந்த சீர் செய்ய படுகிறது. ஒரு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டாரிடம் சொல்லி விட்டுப் பெண்ணையும் மாப்பிள்ளையும் அழைத்து வந்து, புதுத்துணிகள் எடுத்து கொடுத்துப் பலகாரங்கள், வெற்றிலைபாக்கு, பழம் , எலுமிச்சம் பழம் எல்லாம் வைத்து, மூன்று அல்லது ஐந்து சுமங்கலிகள், புகுந்த வீட்டிற்க்கு கொண்டுபோய் விட வேண்டும். அன்றும் அவரவர் விரும்பம் போல் பாத்திரங்கள், நகை, போடலாம். அன்றே பெண்ணிற்கு மாங்கல்ய சரடை மாற்றி தங்கச் சங்கலியில் கோர்த்துக் கொள்ளலாம்.

வளைகாப்பு :

வாழையடி வாழையாக குலம் தழைக்கவும், மனித இனம் தொடரவும், குழந்தைப்பேறு இன்றியமையாதது . பெண் கருவுற்ற 5, 6, 7, மாதங்களில், ஒரு நல்ல நாள் பார்த்து பெண் வீட்டார், கொஞ்சம் பலகாரம், பழங்கள், வெற்றிலை பாக்கு, கொண்டுபோய் வைத்துவிட்டு, பெண்ணின் மாமனார், மாமியாரிடம், சீர் செய்து



அழைத்து போக நாள் குறித்து தரும்படி கேட்க வேண்டும். மாப்பிள்ளை வீட்டார் குறிப்பிட்ட தேதியில், விருந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு வகை இனிப்பு, இரண்டு வகை காரம், பழம்,பூ, எலுமிச்சம் பழம், வெற்றிலை பாக்கு , சந்தனம், குங்குமம், கல்கண்டு, 5 மஞ்சள் கொம்பு, வைத்து நல்ல நேரம் பார்த்து. முதலில் 5 சுமங்கலி பெண்கள், மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டில், பெண்ணுக்கு புடவை, கண்ணாடி வளையல், பூ, குங்குமம், மஞ்சள் சரடு முதலியவை வாங்கி வைக்க வேண்டும். நல்ல நேரத்தில் பெண், புதுப்புடவை, உடுத்தி, அலங்காரம் செய்த பின்னர், 5 சுமங்கலி பெண்கள் வாசலில் வந்து கிழக்கு நோக்கி நின்று பெண்ணிற்கு மஞ்சள் பூசி, பொட்டும் பூவும் வைத்து மஞ்சள் சரடு கட்டவேண்டும். அவர்களும் பூவும் பொட்டும் வைத்து கொண்டு மஞ்சள் சரடு கட்டிக் கொள்ளவேண்டும். கிழக்குப்பார்த்து 6 தலை வாழை இழை போட்டு பெண்ணை நடுவில் உட்கார வைத்து எல்லோரும் சாப்பிட வேண்டும். சாப்பிட்ட பின்னர், இலைகளைப் பெண்ணே எடுக்க வேண்டும்.

அதன் பின் ஒரு அறையில் ஜமக்காளம் விரித்து, மனைப்பலகை போட்டு பெண்ணை அதில் உட்கார வைக்க வேண்டும். இருபுறமும் குத்துவிளக்குகள் ஏற்றி வைக்க வேண்டும். ஐந்து பெண்கள், பெண்ணிற்கு முதலில் வளையல் போட்டுவிட்டுத் தாங்களும் போட்டு கொள்ள வேண்டும். மஞ்சள் பூசிக்கொண்ட ஐந்து சுமங்கலிகளுக்கும் ஒரு சிறுபெட்டியில் வெற்றிலை பாக்கு, மஞ்சள் கொம்பு, கல்கண்டு, குங்குமச்சிமிழ் வைத்து கொடுக்க வேண்டும். வீட்டில் உள்ள அனைவருக்கும் வளையல். சந்தனம், குங்குமம், மஞ்சள் சரடு கொடுக்க வேண்டும்.

மாமியார் பச்சை, சிவப்பு வளையல் போட்டுச் சரடு கட்டி விட வேண்டும், அவரும் பூ வைத்து சரடு கட்டிக் கொண்டபின், பெண் கையில் ஒரு தட்டினைக் கொடுத்து, அதில் வெற்றிலை பாக்கு வைக்க வேண்டும், எல்லோரும் பெண்ணை ஆசீர்வாதம் செய்து மொய்ப்பணம் கொடுக்கலாம். எல்லோரும் வைத்தபின், தட்டில் சந்தனம், குங்குமச்சிமிழ், வெற்றிலை பாக்கு, பூ, 5 எலுமிச்சம் பழம், கல்கண்டு, பணம், வைத்து, மாமனாரும், மாமியாரும் ஆசீர்வாதம் செய்து, தட்டை பெண்ணிடம் கொடுத்து அனுப்பி வைக்க வேண்டும்.

போகும்போது பூஜை அறையில் போய் நமஸ்காரம் செய்த பின்னர் எல்லோரிடமும் “போய்விட்டு வருகிறேன்” என்று கூறி விடைபெற்று பிள்ளையார் கோவிலுக்கு செல்ல வேண்டும், அப்படி போகும் பொது மாபிள்ளையைப் பார்க்கக் கூடாது.

பெண், தனது பிறந்த வீட்டிற்கு செல்லும் முன், ஒரு தட்டில் பழம், கற்பூரம், ஊதுபத்தி, மஞ்சள் சரடு (பிள்ளையாருக்கு இடுப்பில் சுற்றும் அளவு), மாலை, கல்கண்டு, எடுத்துக் கொண்டு பிள்ளையார் கோவிலுக்கு செல்ல வேண்டும். பிள்ளையாரைக் கும்பிட்டுப் பழம், கல்கண்டு அங்குள்ள சிறிய குழந்தைகளுக்கு கொடுத்துவிட்டு, தாய் வீட்டிற்குப் போக வேண்டும்.

புருண்டு (புன்யோஜனம்) :-

குழந்தையின் நலத்திற்காகவும், தாயின் நலத்திற்காகவும், செய்யப்படும் சடங்கு தான் 'புருண்டு' எனப்படும். சிலர் ஐயர் வைத்து புன்யோஜனம் செய்வார்கள், கீழ் கொடுத்துள்ள சாங்கியம் செய்த பின்னர் ஐயர் புனியோஜனம் செய்து தீர்த்தம் கொடுப்பார். குழந்தை பிறந்த 7, அல்லது 9, அல்லது 11 ஆம் நாளில் செய்ய வேண்டும். இதற்க்கு ¼ படி நவதானியம், காயம் பொடி எனப்படும் சுக்கு, மிளகு, வெல்லம் சேர்த்து பொடித்த பொடி, கொள்ளுப் பருப்பு, ஒரு மண்சட்டி, 2 மணவிளக்கு, வெற்றிலை பாக்கு, பூ, மஞ்சள் பொடி, குங்குமம், கற்பூரம் ஊதுபத்தி, மஞ்சள் சரடு, 1 டம்ளர் மோர், 1 கொத்து வேப்பிலை ஆகியவற்றை தயாராக வைக்க வேண்டும்.வீட்டிற்கு வெளியே ஜலமூலையில் பூமியில் ஒரு அடி சதுரத்தில் ஒரு குழி உண்டாக்கி , சமமாக இருக்கும்படி செய்யவேண்டும். அந்த குழியில் மஞ்சள் நீர் தெளித்து 3 கூழாங்கற்களை கழுவி வரிசையாக வைக்க வேண்டும்.



பின் சாப்பாட்டுடன் காயம் பொடி சேர்த்துப் பிள்ளையாராக பிடித்து வைக்க வேண்டும், ஒரு மஞ்சள் பிள்ளையாரும் பிடித்து வைக்க வேண்டும்.இந்த ஐந்து சாமிகளை குழிக்குள் வைத்து,அவர்களை சுற்றி ஒரு மஞ்சள் சரடு சுற்ற வேண்டும். மஞ்ச பொடியில் ஆர்த்தி கரைத்து வைக்க வேண்டும். சாமிகளுக்கு பூ வைத்து விளக்குகளை ஏற்றி, ஒரு தட்டில் புடவை ரவிக்கை, வெற்றிலை பாக்கு, பழம், பூ வைத்து கொள்ளுப்பருப்பு சாப்பாடும் சேர்த்து வைத்து, புருண்டு செய்யும் பெண், பூஜை செய்ய வேண்டும். பின்னர் முத்து பவிழத்தைக் குழிக்குள் வைத்து பெண்ணிற்கும், குழந்தைக்கும் ஆர்த்தி சுற்றிய பின், சட்டியைக் கல்லில் உடைத்து,

ஒரு சிறு துண்டு ஓட்டை எடுத்துக் குழியை நன்றாக மூடிவிட வேண்டும். குழியின் மேல் அந்த ஓட்டை வைத்து தாய் 3 முறை குழியை மிதிக்க வேண்டும்.

தாயின் கையில் வேப்பில்லை கொத்தைக் கொடுத்து, குழியின் மேல் மோர் விட்டு மூன்று முறை கும்பிட்டதும் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, வீட்டின் முன்வாசல் வழியாக குழந்தையை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும்.

ஒரு பெரிய தட்டில், அரிசியை போட்டு, அதன் மேல் ஒரு விரிப்பினை விரித்து, அதில் குழந்தையைப் படுக்க வைத்து, முதலில் அத்தை முறையில் உள்ள பெண், மஞ்சள் நூலில் அரைஞான் கட்ட வேண்டும், பின்னர் மற்றவர்கள் நகை போடலாம். குழந்தைக்கு தலை வாசல் படியில் சிறிது நீர்விட்டு உரசி, அதை முதலில் நெற்றியில் பொட்டுவைத்துப் பின்னர் கருப்பு பொட்டு வைக்க வேண்டும். அன்றே 2 சுமங்கலிகள் உடன் பெண் வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய், நவதானியம், வேப்பிலை, கற்பூரம், ஊதுபத்தி, மோர், மஞ்சள் ஆகியவை எடுத்துக்கொண்டு தண்ணீர் எடுக்க செல்ல வேண்டும். தண்ணீர் தொட்டியின் மேல், மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைத்து, அத்துடன் 3 சாணி பிள்ளையாரும் வைக்க வேண்டும்.

தேங்காய் உடைத்துப் பூஜை செய்து, சாணி பிள்ளையார் மேல் நவதானியம், வெற்றிலை பாக்கு வைத்து, மோர் விட்டுக் கும்பிட்ட வேண்டும். பின்னர் மூன்று பெரும் குடங்களில் தண்ணீர் எடுத்து வந்து சமையல் அறையில் உள்ள பாத்திரங்களில் ஊற்ற வேண்டும். அதன் பின்னர் தான் பெண் விட்டில் உள்ள எல்லா இடங்களிலும் புழங்கலாம்.

பிட்ட சாங்கியம் (குழந்தைச்சீர்) :

தாய் வீட்டில் மகப்பேற்றினைத் முடித்து கொண்டு, குழந்தையுடன் கணவன் வீடு திரும்பும் பெண்ணுக்கு, பெற்றவர்கள் செய்யும் சாங்கியமே, பிட்ட சாங்கியம் எனப்படுவது. கம்மகுலப் பெண்ணின் வாழ்க்கையில், அவளுக்கு செய்யப்படும் சிறப்பு சீர்களில், இதைதான் கடைசியாகச் செய்யபடுவது.

இந்தகாலத்தில், இந்த சடங்கை எப்போது வேண்டுமானாலும் செய்கிறார்கள். பெண் குழந்தையாக இருந்தால், கௌரி விரதம் என்னும் உட்தாபிஞ்சேதி சாங்கியம் செய்வதற்கு முன்பே இந்த பிட்ட சாங்கியம் செய்ய வேண்டும். குழந்தைக்கு 5 அல்லது ,7 அல்லது, 9 அல்லது, 11 ஆம் மாதங்களில் இந்த சீரைச் செய்யலாம். இதற்க்கு முக்கியமாக மூன்று புடவை, ரவிக்கைகள், ஒரு தொட்டில் கொக்கி, 2

தொட்டில் துணிகள், பால் ஊற்றும் சங்கு, எண்ணெய் பாத்திரம், ஒரு கரண்டி, ஒரு செம்பு, ஒரு குடம், ஆகியவையும் , பெண் வீட்டாரின் வசதியை பொறுத்து, பாத்திரங்களும், குழந்தைக்கு நகையும் வாங்க வேண்டும்.

ஒரு சதுரமான புதுத்துண்டில் நான்கு மூலையிலும் மஞ்சள் தடவி, அதில் ஒரு தேங்காய், வெற்றிலை பாக்கு, பூ, சந்தனவில்லை, குங்குமச்சிமிழ், 5 எலுமிச்சம் பழம், மஞ்சள் சரடு 3 பிடி, தொட்டில் கொக்கி, சங்கு, ஒரு புடவை, ரவிக்கை, சுண்டு காரம் எனப்படும் சுக்கு, வசம்பு, மிளகு, ஜாதிக்காய், பூண்டு சேர்த்த பொடி, ஆகியவற்றுடன் பணம் வைத்து கட்ட வேண்டும். இந்த மூட்டையை பெண்ணின் சகோதரர் எடுத்து வர வேண்டும்.

செம்பில் மஞ்சள் பொட்டு, எண்ணெய் பாத்திரத்தில் எண்ணெயும், குடத்தில் சக்கரையும் போட்டு, புதுப்பாத்திரத்தில் இனிப்பு ,காரம், வெற்றிலை பாக்கு வைத்து அனுப்ப வேண்டும். இந்த சீருக்கு பழம் வைப்பதில்லை. நல்ல நேரத்தில் பெண் புது புடவையை உடுத்திக் கொள்ள வேண்டு, 5 சுமங்கலிகள், பெண்ணை வாசலில் கிழக்கு நோக்கி நிறுத்து மஞ்சள் பூசி, பூ வைத்து, மஞ்சள் சரடு கட்டிவிட்டுத் தாங்களும் பூ வைத்து பொட்டு வைத்து மஞ்சள் சரடு கட்டிக்கொள்ளவேண்டும். பின்னர் பெண்ணின் மடியில், வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம் வைத்து, தாங்களும் எடுத்துக் கொண்டு, மாப்பிள்ளை வீட்டிற்கு செல்ல வேண்டும். அங்கு வாசற்படியில் ஆரத்தி எடுத்து குழந்தையும் தாயும் வரவேற்க வேண்டும்.

சீர் மூட்டையை பூஜை அறையில் வைத்துக் கும்பிட்டு, மூட்டையை அவிழ்த்து, அதில் உள்ள புடவையை எடுத்து மாப்பிள்ளையின் தாய் அல்லது சகோதரி கட்டிக்கொண்டு மஞ்சள் ,குங்குமம், வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம், பூ ஆகியவற்றை எடுத்து தட்டில் வைத்து, மாப்பிள்ளை வீட்டில் உள்ள சுமங்கலி பெண்கள் 5 பேர், பெண்ணிற்கு மஞ்சள் பூசிப் பொட்டு வைத்து, மஞ்சள் சரடு கட்டி விட்டு, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம் கொடுத்து, அவர்களும் எடுத்து கொள்ளவேண்டும். பின்னர், அன்றோ ,அல்லது வேறு ஒரு நல்ல நாளில் மற்றொரு புடவையை தாய் வீட்டிற்கு சென்று கட்டி கொண்டு வரவேண்டும். இத்துடன் கம்ம குலப் பெண்ணிற்குச் செய்யும் சாங்கியம் நிறைவு பெறும்.

மொட்டை கொட்டேதி ((முடி இறக்குதல் ) :-

பிறந்த குழந்தையின் தலை உச்சி, மென்மைத் தன்மை மாறி, வலுப் பெற்றதும், முடி



இறக்குதல் செய்ய வேண்டும். குழந்தை பிறந்து 7, 9, அல்லது 11 ஆம் மாதங்களில், முடி இறக்கும் சாங்கியம் செய்ய வேண்டும். அவரவர் குலதெய்வக் கோயிலில் செய்ய வேண்டும். இதற்கு, நல்ல நாள் பார்த்து தாய் வீட்டார், குழந்தைக்கும், பெற்றோர்களுக்கும், புத்தாடைகள் எடுக்க வேண்டும். முடி இறக்கும் நாளில் காதும் குத்தலாம், அதற்கு கம்மல் வாங்க வேண்டும். கோயிலில் திருமஞ்சனம் செய்ய, பொங்கல் வைக்க சாமான்கள் வாங்க வேண்டும். தாய்மாமன் மடியில் குழந்தையை உட்கார வைத்து முடி இறக்க வேண்டும். பின் குழந்தையை குளிக்க வைத்து புதுத்துணிகள் அணிவித்து காது குத்திக் கம்மல்கள் அணிவித்து, பூஜைகள் முடித்துக்கொண்டு, குழந்தையும் பெற்றோரையும் ஆசீர்வாதம் செய்ய வேண்டும் , பின்னர், எல்லோருக்கும் விருந்து கொடுத்து அனுப்ப வேண்டும்.

கௌரி விரதம்:

இந்து மதத்துக்கே உரிய சடங்குகளும் தர்மங்களும் மக்களால் இயன்ற வரை கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய கம்மவார் குலம், பிற இனத்தினரைக் காட்டிலும் பெண்மையைப் போற்றிப் பரவிடும் சீர்களையும், சடங்குகளையும் மிகுதியாகக் கடைப்பிடித்து வருகின்றது. உறவுகளைக் கட்டிக்காக்கவும், உயர்வுகளைப் பேணிக்காக்கவும், கடைபிடிக்கப்படும் சடங்குகளில் கௌரி விரதம் என்பது கம்மவார் குலத்தின் தலையாய சடங்காகும். பெண்களால்தான் குடும்பங்கள் பெருமை அடைகின்றன. பிறந்த விட்டிலும் புகுந்த வீட்டிலும் பெண்ணால்தான் நற்செயல்கள் நடைபெறுகின்றன. பொறுமை எனும் நகையணிந்து பெருமையைக் கடைபிடித்து வாழ்பவள் பெண். இதனை நன்குணர்ந்தவர்கள் கம்மவார் குலத்தினர். எனவேதான் உலகெலாம் பரவி நின்று, உயிர்களுக்கு உற்ற துணையாய் இருந்து, வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தந்து அருளும் அன்னை பராசக்தியின் வடிவமாய் விளங்குகின்ற ரேணுகாதேவியைத் தமது குலத்தின் முழுமுதற்கடவுளாக வணங்கி வருகின்றனர். கம்மகுலத்தார் தத்தம் குலத்தில் பிறந்த கற்பும் உயர் பண்புகளும், தெய்வீகத் தன்மையும் பொருந்திய பெண்மணிகளைக் குலதேவதைகளாகக் கொண்டு நெடுங்காலமாக வணங்கி வருகின்றனர்.

கம்மாவார் பெயர்க்காரணம்:

காமாதிகா முனிவர் என்பவர் மகாலட்சுமியின் கம்மலை வைத்து பக்தியோடு வணங்கி வந்தார். அந்தக் கம்மலில் இருந்து சர்வசக்தியோடு சத்யமும், தருமமும், நீதி தவறாத சத்ரிய அரசர்கள் பிறந்தனர். மஹாலக்ஷ்மியின் கம்மலில் இருந்து அவதரித்த அரசர்கள் "கம்மவார்" என அழைக்கப்பட்டனர். அக்காலதில் அரச குலத்தினர் அனைவரும் ரேணுகாதேவி, ஜமதக்கினி முனிவரின் புதல்வனாகிய பரசுராமரின் கோபத்திற்க்கு ஆளாயினர். ("தந்தை ஜமதக்னியைக் கொன்ற அரச வம்சத்தினரை 21 தலைமுறை அழிப்பேன்" என்பது பரசுராமரின் சபதம்). தன் மகன் பரசுராமனின் கோபத்தினின்று கம்மவார் குலத்தைக் காப்பாற்றியவள் அன்னை ரேணுகாதேவி.

கம்மவார், சத்திரியர்களாக (அரசர்களால்) நீடித்தால், பரசுராமனால் ஆபத்து என்பதை உண்ர்ந்த ரேணுகாதேவி, கம்ம குலதவர்களை, பூணூல், கிரீடம் அகியவற்றையும், அரசு பதவியையும் துற்க்குமாறு செய்து தலைக்கு உருமால்க்களை கட்டி, விவசாயிகளாக மாற்றினாள். அன்று முதல் கம்ம குலத்தவர், விவசாயத்தையே தமது முதன்மைத் தொழிலாக கொண்டனர். ரேணுகாதேவி கம்ம குலத்தை அழிவினின்று காத்ததோடு மற்றுமின்றி, சகல நன்மைகளையும் அருளினாள். அவள் அருளால் கம்ம குலம். தழைத்தோங்கியது.

கௌரி அம்மன் கதை:

கம்மவார் குலத்தை உருவாக்கிய, பேணிக்காத்த அன்னை ரேணுகா தேவியின் மகளே கௌரி அம்மன். ஓரிகண்டி பட்டிணத்தில், தனது தமயன் மார்களாலும், தாய் மாமனாலும் சீரும் சிற்ப்புமாக வளர்க்கப்பட்டாள். கௌரி அம்மனின் அத்தை ஹரிதேவி (ஜமதக்னியின் தங்கை) தனது மக்கள் ஏழு பேர்களில் ஒருவனுக்கு கௌரி அம்மனை திருமனம் செய்து வைக்க விரும்பினாள். அன்னையின் விருப்பத்தை நிறைவேற்றக்கருதி ஏழு பேரும் மாறு வேடத்தில் சென்று கௌரியை மயக்கி சிறை எடுத்து வந்தனர்.

பின்னர் கௌரி அம்மன் தெய்வ அம்சம் நிறைந்தவள் என்பதை உணர்ந்து அவளை திருமனம் செய்து கொள்ள மறுத்தனர். அதனால் வேதனை அடைந்த கௌரி அம்மன் "நான் ஏழுவரால் எடுத்துக்கொண்டு வரப்பட்டவள். இனி நான் எந்த ஆடவனையும் மணந்து, இவ்வுலகில் வாழ விரும்பவில்லை. பிறந்த வீட்டிற்கும் செல்லவில்லை" என்றுணர்த்தி. அல்லி மலர் நிறைந்த தடாகத்தின் அருகில் அரளியும், பிற மலர்களும் நிறைந்த இடத்தில் எலுமிச்சை மரத்தடியில் அம்மிக்கல்லின் மீது கொலுவிருந்து

தெய்வமாகி விடுகிறாள். ஆதலால் “அம்மிக்கல்லே கௌரியம்மனாகப் பூஜிக்கப்படுகிறது”

அப்பொழுது, கௌரியம்மன் ஒரு வாக்கு தருகிறாள். “ஏழு குலப்பெண் குழந்தைகள் விரதம் இருந்து என்னை வணங்குவார்கள். அவர்களில் ஆறு பேர்களது விரதம் செல்லும். கம்மவார் வம்சத்தில் பிறந்த பெண் குழந்தை, அக்கம்மாவின் விரதம் மட்டும் செல்லாது போய்விடும் அதனால் கம்மவார் குலத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு 7, 9, 11 ம் வயதுகளில், ஏதாவது ஒரு வயதில் “உத்தாபின சீர்” செய்ய வெண்டும். அவ்வாறு செய்யாது போனால், அந்த பெண்ணிற்க்கு மாராப்பு அணியும் சீரும். (பைண்ட சங்க்யம்) திருமணத்தின் போது நலங்குச் சீரும், குழந்தைச் சீரும் செய்ய இயலாது போய்விடும்” என்பதே கௌரி அம்மன் தந்த வரமாகும். பின்னர் கௌரியம்மன் பூமியில் ஐக்கியம் ஆனாள். கௌரியம்மனின் விருப்பத்தின்படியே கம்ம குலத்தவரால் கௌரிவிரதம் கடை பிடிக்கப்பட்டு வருகின்றது.

கம்மவார் குல அக்கம்மாவுக்கு கௌரி விரதம் செல்லாமல் போனது:

கௌரியம்மன் கூறிய வாக்குப்படியே தொடக்க் காலத்தில், பிராமண குலம், கம்மவார் குலம், கோமுட்டி குலம், கொல்ல குலம், பலிஜவார் குலம், பட்ராஜு குலம், உடையார் குலம் ஆகிய ஏழு குலதில் பிறந்த குழந்தைகளும் தத்தம் 7, 9, 11 வயதுகளில் கௌரி விரதம் இருந்தனர். இவ்வாறு விரதம் இருந்த சமயம் கம்மவார் குலப்பெண் குழந்தை அக்கமாள் தனது அன்னண்மார் மூவரோடு வாழ்ந்து வந்தாள். அவர்கள் தங்களது ஒரே தங்கையான அக்கம்மாள் மீது மிகுதியான பாசம் கொண்டிருந்தனர். அக்கம்மா உரிய வயதினை அடைந்த்தும், கௌரி விரதம் வைத்துச் சாமி கும்பிட முடிவு செய்தனர். விரதத்தை கடை பிடிக்கின்ற மற்ற ஆறு குல பெண் குழந்தைகளையும் தமது வீட்டிற்கே வரவழைத்து விரதம் இருக்கச் செய்தனர்.

விரத நாளில் (கௌரி விரதத்தை ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில், பௌர்ணமிக்கு அடுத்த மூன்றாவது நாளிலும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஐப்பசி மாத பௌர்ணமிக்கு அடுத்த மூன்றாவது நாளும் அனுஷ்டிப்பது முறையாகும்). சூரிய உதயத்திற்க்கு முன்னர் ஏழு குழந்தைகளை குளிப்பாட்டி சாமி கும்பிட்டு விரதம் தொடங்கினர். அதிகாலையில் குழந்தைகளுக்கு விரத் உணவு வழங்கினர். குழந்தைகளை கோவில்களுக்கு அழைத்துச்சென்று இறைவனை வணங்கினர்.

பின்பு கூடைகள் கொடுத்து மலர் கொய்து வர அனுப்பினர். குழந்தைகள் 7 பேரும் ஊஞ்சல் ஆடி மகிழ்ந்தனர். மாலைபொழுது வந்தது. பிற குலத்தைச் சார்ந்த 6 குழந்தைகளும் தத்தம்

வீடுகளுக்கு சென்றனர். பகல் முழுதும் விரதம் மேற்க்கொண்டதால் கம்ம குல அக்கம்மாள் பசி மயக்கதிற்க்கு ஆளானாள். அப்படியே படுத்து உறங்கி விட்டாள். விவசாயிகளான அண்ணன்மார்கள் மாலையில் வீடு திரும்பினர். பசி மயக்கம் உள்ள தங்கையின் நிலை கண்டு வேதனைக்கு ஆளாயினர். கௌரிவிரதம் மேற்க்கொள்ளும் நாளில் இரவு நிலவு உதித்த பின்னர் நிலாவைப்பார்த்து வணங்கிய பின்னர் தான் விரதத்தை முடிக்க வெண்டும் என்பது நியதி, ஆனால் அதுவரை தமது தங்கை பசி பொறுக்க மாட்டாள், எனவே நிலா உதிப்பதற்க்கு முன்னரே நிலா உதித்து விட்டதாக நம்ப வைத்து விரதத்தை முடிக்கச்செய்ய வேண்டும் என தீர்மானித்தனர். அதற்காக ஒரு உபாயத்தை மேற்கொண்டனர்.

ஒரு அண்ணன் அரசமரத்தில் ஒரு கண்ணாடியைக் கட்டி வைத்தார். மற்ற அண்ணன் அதன் எதிரிலிருந்த புளியமரத்தில் தீயை உண்டாக்கினார். அந்த அரசமரத்திற்கு கண்ணாடியில் புளியமரத்து நெருப்பு, "நிலா" கிளம்பி வருவது போன்று ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்கியது. பின்னர் அண்ணன்மார்கள் அக்கம்மாவை வீட்டிற்கு வெளியில் அழைத்து வந்து, "இதோ பார் நிலா உதித்து விட்டது. நீ நிலாவைக் கும்பிட்டு விரதத்தை முடித்துக் கொள்ளலாம்" என்றனர். தான் கண்ட நிலாத் தோற்றத்தை உண்மை என நம்பிய அக்கம்மாள், நிலாவை வணங்கி, விரதத்தை முடித்துக் கொண்டு, படுத்து உறங்கி விட்டாள்.

வானத்தில் உண்மையாக் உதித்த நிலாவைக் கண்ட பிற குலக்குழந்தைகள் ஆறு பேரும் கம்மவார் குல அக்கம்மாவின் வீட்டிற்கு வந்தனர். அவர்களைப் பார்த்த அக்கம்மாவின் அண்ணன்மார்கள், " எங்கள் அக்கம்மா நிலவைப் பார்த்து கும்பிட்டு விரதம் முடித்து விட்டாள்" என்றனர் அதைக் கேட்ட பிற குலத்தைச் சார்ந்த குழந்தைகள். " இப்போது தானே நிலா உதித்தது. உங்கள் அக்கம்மா எப்படி விரதம் முடிக்க முடியும்" என்று கேட்டு மிகுதியான வேதனைக்கும் சினத்திற்கும் ஆளாயினர்.

"முறையான விரதம் மேற்க்கொள்ளாத அக்கம்மாவின் கௌரி விரதம் செல்லுபடியாகாமல் போகட்டும். விரதம் செல்லுபடியாகாமல் போனதால், உங்கள் கம்மவார் குலத்தில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு 7, 9, 11 ஆம் வருடங்களில் "உத்தாபின சீர்" செய்ய வேண்டும்" என்று சாபம் இட்டனர். கௌரி விரதம் மேற்க்கொண்டபோது கம்மவார் குல அக்கம்மாவின் விரதத்திற்கு அவளது அண்ணன்மார்களால் பங்கம் ஏற்ப்பட்டதால் "உத்தாபினசீர்" செய்யும்பொழுது சகோதரர்கள் அருகில் இருக்க்க்கூடாது என்ற நியதி ஏற்ப்பட்ட்து.

கௌரி விரதம் பூஜை அனுஷ்டிக்கும் முறை :

ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மாதங்களில் பௌர்ணமிக்கு அடுத்த மூன்றாவது நாள் இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இதனை கம்மவார் தத்தெலு பண்டக, உத்தாபின, அசுன்ய சயனவிரதம் எனவும் வழங்குவர். பெண் குழந்தைகளின் 7,9,11 ஆம் ஆண்டுகளின் இச்சீர் செய்யப்படும்.

உற்றார் உறவினர் சுற்றத்தாரை அழைத்தல் வேண்டும். வயதான சுமங்கலிப் பெண்கள் மூவரும், ஆடவர் இருவரும் (இரண்டு தம்பதிகள், ஒரு சுமங்கலி என ஐவர்) குழந்தைகளுடன சேர்ந்து விரதம் இருத்தல் வேண்டும். சூரியன் உதிப்பதற்கு முன்னரே அவர்கள் ஐவரும், குழந்தையை நடுவில் உட்கார வைத்து, தலைவாழை இலை போட்டுச் சிற்றுண்டி சாப்பிட வேண்டும். பகலில் சாப்பிடக் கூடாது. குழந்தை பகலில் தூங்கக் கூடாது. ஊஞ்சல் கட்டிக் கொடுத்து விளையாடச் செய்ய வேண்டும். விரதம் மேற்க்கொள்ளும் நாளில் அக்குழந்தை வாசற்படியினையோ, நிலைப்படியினையோ தொடவோ, மிதித்து நடக்கவோ கூடாது.

அன்று மாலையில் குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து அரப்பு வைத்து மஞ்சளைத் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும். புத்தாடை அணிய செய்ய வேண்டும். தலைவாரி, பூச்சூட்டிக் குழந்தையை நன்கு அலங்கரிக்க வேண்டும். நெற்றியில் நாமம் வைக்க வேண்டும்.

மாலையில் விரதம் மேற்க்கொண்ட பெரியோர்கள் ஐவரும், குழந்தையை அழைத்துக் கொண்டு, உற்றார் உறவினர்களுடன் கௌரி அம்மன் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

(கௌரி அம்மனுக்கென்று தனியான கோயில் கிடையாது. ஊரில் உள்ள கோயிலிலோ அல்லது வாழும் இல்லத்திலெ கௌரி அம்மனை அலங்கரித்து வழிபடலாம். அவ்வூரில் விரதம் மேற்க்கொண்ட குழந்தைகள் பலரும் ஒரே இடத்தில் சேர்ந்து கௌரி அம்மனை ஒன்றாகவும் வணங்கலாம்).

கௌரி அம்மன் வடிவம் :
அம்மிக்கல்லை சுத்தம் செய்து படுக்க வைத்து, அரைக்கும் குழவியை நிற்க வைத்து மஞ்சளில் கண் மூக்கு வாய் காது வைத்து மலர்களாலும் நகைகளாலும் அலங்கரிக்க வேண்டும். (கௌரியம்மன் அம்மிக்கல்லில் ஐக்கியம் ஆனவள்) அதனையே கௌரியம்மனாக உருவகித்து வணங்க வேண்டும்.

கோவிலுக்கு எடுத்துச் செல்ல வேண்டியன:

ஒரு தட்டில் வாழை இலை போட்டு அதில் ஐந்து எண்ணிக்கையில் உப்பட்டு, கஜ்ஜாயம், உப்பில்லாத தோசை, பணியாரம், வடை ஆகியவற்றை வைத்து மற்றொரு இலையால் மூட வேண்டும். அதனோடு ஒரு கிண்ணத்தில் உப்பில்லாத பருப்பு சாதம், தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு ஊதுபத்தி, கற்பூரம், அரளி, வில்வம், மல்லிகை, தாமரை, துளசி முதலிய உதிரிப்பூக்கள், நவதானியம் முதலியவற்றை கோவிலுக்கு எடுத்துச்செல்ல வெண்டும். மஞ்சள் தடவிய முன்னூலில் அரளிக்காய் ஒன்றினைக் கட்டி, விரதம் இருக்கும் குழந்தையின் வயதிற்கேற்ப (7,9,11) முடிச்சுகள் போட வேண்டும். (நூல் குழந்தையின் கையில் கட்டி முடிச்சு போடும் அளவு இருத்தல் வேண்டும்).

கொண்டு சென்ற பூசைப் பொருள் அனைத்தையும் கௌரியம்மனின் முன்னால் படைத்து வணங்க வேண்டும். விரதம் இருக்கும் குழந்தைகளும், பெரியோர்களும், அங்கு கூறும் கௌரியம்மனின் கதையை அமைதியாகவும் பக்தி சிரத்தையுடனும் கேட்க வேண்டும். கதை கேட்டு முடிந்த பின்னால் கொண்டு போன பலகாரங்களில் கொஞ்சம் ஸ்ரீ கௌரிக்கு சமர்ப்பித்து விட்டு, கொஞ்சம் உதிரிப் பூக்கள், அரளிக் கொம்பு, அரளிக்காய் ((முடிச்சு போட்டது) ஆகியவற்றை மட்டும் வீட்டிற்கு எடுத்து வர வேண்டும்.

வீட்டிற்கு வந்ததும், விரதம் மேற்கொண்ட பெரியோர்கள் ஐந்து பேரும் வாசலில் கிழக்கு நோக்கி நிற்க வேண்டும். பெண் குழந்தை அவர்களது பாதங்களை நிறை குடத்தில் உள்ள நீரை ஒரு செம்பில் நிரப்பிக் கழுவ வேண்டும். பின்னர் பாதங்களில் சந்தனம், குங்குமம் வைத்து மலர் இட்டு, கால்களைத் தொட்டுக் கும்பிட வேண்டும். பின்னர் வானத்தில் நிலாத் தோன்றியதும், வீட்டில் உள்ள பெண்கள் குழந்தையைப் பெரியவர் ஐவர் நடுவில் நிற்க வைத்து, எல்லோரது கைகளிலும் அரளிக் கொம்பு கொடுத்துக் கையை விரிக்கச் சொல்லி, மோர் விட்டு நிலாவைப்பார்த்துக் கும்பிடச் சொல்ல வேண்டும். மூன்று முறை கும்பிட்ட பின்னர், அரளிக்கொம்பை கீழே போட வேண்டும். பெரியவர்கள் குழந்தையை வாழ்த்த வேண்டும்.

வீட்டில் தலைவாசலில் கோலம் போட்டு நிலைப்படியில் குழந்தையை கிழக்கு நோக்கி நிற்க வைக்க வேண்டும். குழந்தைக்குப் பின்னால் இரண்டு சுமங்கலிகளும், முன்னால் ஒரு சுமங்கலியும் (விரதம் மேற்கொண்ட சுமங்கலிகள்) நின்று சின்னதாகச் செய்த மூன்று மாவிளக்குகளில் திரி போட்டு நெய் தீபம் ஏற்றி, முடிச்சுகள் இட்ட அரளிக்காயை ஒரு தட்டில் வைத்து முன்னால் நிற்கும் சுமங்கலி, "முடிமுடி தாராலு இந்தாண்டம்மா" எனச்சொல்லி பின்னால் நிற்பவரிடம் கொடுக்க வேண்டும். அவர் அதை வாங்கி "முள்ளா

தாராலு தெச்சுண்டம்மா" என்று பாடிக்கொடுக்க, முன்னால் நிற்பவர் ஒரு மாவிளக்கை குழந்தையின் வாயில் போட்டு, மெல்லாமல் விழுங்கச் சொல்ல வேண்டும். இதுபோல மூன்று முறை செய்து மூன்று மாவிளக்குகளையும் விழுங்கச் சொல்ல வேண்டும்.

பின்பு மூவரும் சேர்ந்து குழந்தையின் வலது கையில் முடிச்சிட்ட அரளிக்காயைக் கட்ட வேண்டும். அதன் பின்னர் வீட்டிற்குள் வந்து விரதம் இருந்த ஐவரும், குழந்தையோடு அமர்ந்து சாப்பிட வேண்டும். குழந்தை ஐவருக்கும் நடுவில் அமர்ந்து சாப்பிட வேண்டும். ஐவரும் முதலில் உப்பட்டு, வடை, கஜ்ஜாயம், பழம், நெய் சேர்த்துப் பிசைந்து ஆளுக்கு ஒரு கை, குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். பகல் முழுதும் விரதம் மேற்கொண்டதால் சாதம், பருப்பு, சாம்பார், ரசம், காய்கறி, அப்பளம் ஆகியன அனைத்தும் படைக்கப்படுதல் வேண்டும். எல்லொரும் சாப்பிட்டு முடித்தவுடன் ,ஆறு பேரது சாப்பிட்ட இலைகளை குழந்தையே எடுக்க வேண்டும். பின்னர் பெரியோர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்க வேண்டும்.

மறுநாள் காலையில் குழந்தையைக் குளிக்க வைத்து, ஆடை உடுத்தி, அலங்கரித்து, பூஜைப்பொருட்களோடு (தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பூ, கற்பூரம், ஊதுபத்தி, நவதானியம்) கௌரி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். பூஜை முடிந்தவுடன் கையில் கட்டிய அரளிக்காய் நூலை அவிழ்த்து, சாமி முன் வைக்க வேண்டும். அங்கு பூஜித்த மலர்களுடன், அந்த அரளிக்காயையும் ஒரு தட்டில் வைத்து எடுத்து வந்து கிணற்றில் (கங்கம்மா) விட வேண்டும்.
("மஞ்சிமஞ்சி பூவுலு கௌரம்மகு, வாடின பூவுலு கங்கம்மகு")
பிற குழந்தைகளும் உடன் செல்ல வேண்டும். அடுத்த ஆண்டு விரதத்தைக் கடைபிடிக்க வேண்டிய குழந்தைகளும் (6,8 வயதினர்கள் இந்தக் குழந்தைகளோடு சேர்ந்து கொள்வர்). செல்லும் வழியில் 3 இடங்களில் பூத்தட்டை வைத்து கும்மி தட்ட வேண்டும் பின்ன கிணற்றில் இட வேண்டும்.

உத்தாபின சீர் நிறைவேறியமை :

சீர் செய்த அடுத்த ஆண்டு கௌரி விரதத்திற்குரிய நாள் வரை குழந்தையோடு விரதம் மேற்கொண்ட ஐவரும் நலமாக இருத்தல் வேண்டும். அப்போது தான் விரதம் பூர்த்தியாகும். அடுத்த ஆண்டு கௌரிவிரத நாளில் குழந்தையைக் குளிப்பாட்டி, புத்தாடை உடுத்தி அலங்கரித்து கௌரி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். பூ, தேங்காய், பழத்துடன் ஒரு தட்டில், புதிய புடவை ஒன்று ரவிக்கைத் துணி

வைத்துக்கொண்டு செல்ல வேண்டும். அம்மனின் முன் வைத்து, உத்தாபின சீர் நல்ல விதமாக செல்லுபடியானதற்கு நன்றி செலுத்தி வணங்க வேண்டும். பின்னர் குழந்தையுடன் சென்ற ஆண்டு விரதம் இருந்த ஐவருக்கும் நல்லெண்னெய், பருப்புடன், புதிய பாத்திரங்களில் பலகாரம் கொடுத்தனுப்ப வேண்டும்.

நம் முன்னோர்கள், எந்த ஒரு சீரினையும், சடங்கினையும் காரணகாரியங்கள் இன்றி வெறும் பொழுது போக்கிற்காக கடைப் பிடிக்கவில்லை.

கம்மவார் குலத்தினரும், எல்லாச் சீர்களையும், சடங்குகளையும், வாழ்க்கையின் வழிகாட்டும் நெறிகளாகவே கடைபிடித்து வந்துள்ளனர். பெண் குழந்தையின் முதல் பருவம் பேதைப் பருவம் (7,9 வயது). அந்த வயதில் குழந்தையின் மனதில் தம்மைச்சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகள் மெல்ல மெல்ல வேரூன்றும். எனவே அந்த வயதில் கடை பிடிக்கப் படுகின்றன. “உத்தாபின சீரால்” அக்குழந்தையின் உள்ளத்தில் விரததின் நன்மை பெரியோர்களை மதித்தல், உறவினர் சூழ்ந்திருத்தல், தெய்வ வழிபாடு ஆகிய நல்ல பண்புகள் வேரூன்றுகின்றன. குழந்தை வளர, வளர நல்ல பண்புகளும் அவளோடு சேர்ந்து வளர்கிறது. அவளால், பிறந்த வீடும் புகுந்த வீடும் நலம் பெறுகின்றது. எல்லாம் வல்லவளாகிய பராசக்தியின் வடிவமாகிய – கம்மவார் குலத்தில் எல்லம்மாவாகிய ரேணுகா தேவியின் அனுக்கிரகம் கிடைக்கப்பெறும், அவள் மகள் கௌரி அம்மனும் துணையிருப்பாள்.

அறிவு தோன்றும் வயதிலேயே பெண்மையைப் போற்றி உத்தாபின சீர், பயின்ட்ட சாங்யம் போன்ற சீர்களை மேற்கொண்டு வருகின்ற, கம்மவார் குலம், இவ்வுலகில் மேன்மேலும் தழைத்தோங்கும்.

பயிண்டு சாங்கியம் (மாராப்பு சீர்) :

ஒரு பெண் குழந்தை தான் ஒரு பெண்ணாக உருமாறிக் கொண்டிருப்பதை உணர்த்தும் சடங்குதான் “பயின்டேசேதி” என்னும் மாராப்புச் சீர் ஆகும். இந்த சடங்கை ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்கள் தவிர பிற மாதங்களில், ஒரு நல்ல நாள் பார்த்து இச்சடங்கை செய்யலாம். பெண்ணின் ஒன்பதாவது வயதில், ஒரு நல்ல நாளில், தாய் மாமா, மாமி, பாட்டி, தாத்தா, எல்லோரும் சேர்ந்து பெண்ணை அழைத்து வந்து, புதிய புடவை, ரவிக்கை, நகை முதலியவை வாங்கி வந்து. உறவினர்களை அழைத்துச் சடங்கு செய்ய வேண்டும்.

தாய் மாமாவின் மனைவி, பெண்ணிற்கு எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டும். பின்னர் ஒரு மனைப்பலகை போட்டு, ஜமக்காளம் விரித்து அமர வைத்து, ஒரு தட்டில் சேலை, ரவிக்கை, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம் பழம், பூ, ஆகியவற்றை கொடுத்து, சந்தனம், குங்குமம் வைத்துப் பூச்சூட்ட வேண்டும்.

அதன் பின்னர் பெண்ணை அழைத்து போய், புடவைக்கு மஞ்சள் வைத்து, ஒரு முனையில் வெற்றிலை பாக்கு, பவுன் அல்லது பணம் வைத்து முடிந்து, வலதுபுறம் மாராப்பு வருமாறு புடவை கட்டி விட வேண்டும். பின்னர் பெண்ணை மனைப்பலகையில் அமர்த்தி, குத்துவிளக்குகள் ஏற்றி வைத்து தாத்தா, பாட்டி, மற்றும் உறவினர்கள் எல்லோரும் ஆசீர்வாதம் செய்ய வேண்டும். 5 அல்லது, 7 அல்லது, 9 தட்டுகளில் வெற்றிலை பாக்கு, பழம், பலகாரம் எல்லாம் வைக்க வேண்டும். பின்னர் நல்ல நேரத்தில், பெண்ணை, மாமா, மாமி, அம்மா வீட்டிற்கு அழைத்து வரவேண்டும். அங்கு வாசலில் நிறுத்தி ஆர்த்தி எடுக்க வேண்டும். பூஜை அறையில் போய் கற்பூரம் ஏற்றி சாமி கும்பிட்டுச் சந்தனம், குங்குமம், கொடுக்க வேண்டும்.

ருது மங்கள சீர் :



நம் குல பெண், பருவமடைதலைப் மிக சிறப்பாகச் செய்யப்பட்டு வந்தது. உடல்ரீதியாக திருமணத்தகுதி பெற்றுவிட்ட பெண்ணுக்கு மனரீதியாகவும் , பெற்றோரை விட்டுத் தனித்து இருக்கும் வலிமையை வரவழைக்கவும், சுகாதாரம் கருதியும், முழுமையான ஓய்வு அச்சமயத்தில் தேவை என்பதாலும் பெண்ணைத் தனியே குடில் கட்டி வைக்கும் முறை வழக்கத்தில் இருந்து வந்தது. ஆனால் இன்றைய காலத்தில் வேகமாய் மாறிவரும் வாழ்க்கைச் சூழலில், நம் அனைவரும் இந்த சடங்கை மறந்தும், மறுத்தும் வருகிறார்கள்.

ருதுவான நாள், நேரம், நட்சத்திரம் குறித்து, ஜாதகம் கணிப்பதும் வழக்கம். ருதுவானவுடன் பெண்ணிற்கு மாமி முறை உள்ளவர்கள் ஸ்நானம் செய்வித்து, பால், பழம், சக்கரை சேர்த்துக் கலந்து தர வேண்டும். பின்னர் தாய்ச்சீர் செய்யப்படும். பெண்ணிற்கு நீராடி, தாய் எடுக்கும் புதுப்புடவை, நகை அணிவித்து, ஒரு இடத்தில் அமரச் செய்யவேண்டும். இருபுறமும் குத்துவிளக்குகள் ஏற்றி வைத்து சீர்தட்டுகள்

வைக்க வேண்டும். ஐந்து படி நெல்லை ஒரு பாத்திரத்தில் போட்டு, இரண்டு அச்சு பனைவெல்லம் அந்தந மேல் வைக்க வேண்டும்.இது தான் முக்கிய சடங்குப் பொருளாகும். சுமங்கலிப் பெண்கள் , பெண்ணிற்கு மஞ்சள் குங்குமம் வைத்து இனிப்பு தருவார்கள். அதன் பின், தாய்மாமனால் அமைக்க பட்ட கம்மந்தட்டுகளால் ஆன குடிலில், பெண்ணை, தனியே இருக்கும் படி செய்வார்கள். அன்றோ அல்லது, மூன்று மாதம் கழித்தோ ஒரு நல்ல நாளில் தாய்மாமனால் பெண் வீட்டில் முன் கூறியபடி சீர் செய்யவேண்டும்.